பொ-42.
வை.பெரி.புழு.க

PRESENTED BY:
V. PR. [illegible]
[illegible] CHETTIA[illegible]
PAGANERI.

உ



சங்கம் நிறுவியதுங்கன்,

திருவாளர், வே. இராதாகிருட்டினபிள்ளை அவர்கள், B. A.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## வெள்ளிவிழா வரலாறு

தங்குபுகழ்ச் செந்தமிழ்க் கோர்
அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும்
கடவுளாரே

நாளது வெகுதானிய யாண்டு சித்திரைத்திங்கள் ௩, ௪, ௫-ஆம் நாட்களாகிய வெள்ளி, சனி, ஞாயிறு (15, 16, 17—4—38) கிழமைகளில் நம் சங்கத்தின் வெள்ளிவிழா, திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப்புலியூர்ச் சைவப்பெருந் திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின் சீரிய தலைமையின் கீழ், நம் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில், தமிழ் மணங்கமழும் அமைதியுற நடைபெற்றது. தமிழ் நாட்டில் பலவிடங்களினின்றும், இலங்கை, மைசூர் முதலிய பல நாடுகளிலிருந்தும் தமிழன்பும், தமிழறிவும், தமிழ்த்தொண்டாற்றலுமுடைய தமிழ்ப் பெருமக்கள் சுமார் ஐயாயிரவர் வந்திருந்து நம் சங்கத்தமிழ்ப் பெருவிழாவினைச் சிறப்பித்தனர். இளையரும் முதியரும், ஆண்மக்களும் பெண்மக்களும் எனப்பலதிறத்தராய அவர்கள், தமிழ்த்தாயின் திருவிழாப் பொலிவுகண்டு மகிழும் சால்புமிக்கூர்ந்த பெருங்குழுவினராய் விழா நிகழ்ந்த முந்நாளும் தமிழின்பத் தனித் தேனைப் பருகி, நம் தமிழ்ச் சிறப்பு கண்டு தம் உள்ளம் சிறந்தனர்.

அடிகள் வியாழக்கிழமை (14—4—38) இரவு 9-30 மணிக்கு நம் சங்கத்திற்கு எழுந்தருளினர். அவரைத் தமிழ்ப் பெருமக்களும், தமிழிளஞ்சிறூர்களும் பள்ளியக்கிரகாரத்தே எதிர்கொண்டு, தமிழன்னையின் திருப்புகழ்பாடி, “ தமிழ்நாடு வாழ்க, எங்கள் தண்டமிழ்த் தாய் வாழ்க ” என்னு முழக்கொலி விண்முகடுதடவ எதிர்கொண்டனர்.

செந்தமிழன்னையின் சிறப்புறு மகனாரும், நங்கள் சங்கத்து நலமிகு தலைவருமாகிய செந்தமிழ்ப் புரவலர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் அன்புநார் தொடுத்த இன்பப் பூமாலை சூட்டிப் பொலிந்தாராக, ஆங்குக் குழுமியிருந்த தமிழ்ப் பெருமக்களும் சங்கச் சிறார்களும் தமிழன்னையின் புகழ் பாடிப் பரவிய தமிழொலி, கேட்டார் மனத்து இன்பங் கிளருவிப்ப, கண்டார், தாம் கண் பெற்ற பயன் ஈதெனக் களிப்புற்றனரென்றல் மிகையாகாது.

தொண்டர் படையின் தொகை நிரலும், வண்டமிழ்ப் பாடலின் வழங்கொலியும் எண்டிசையிலும் இனிது கனல, அடிகள் நம் சங்கத்தின் பழைய கட்டிடத்திற் கெழுந்தருளிய காட்சி இப்பெற்றியதாக, விழாவிற் கெழுந்தருளிய தமிழ்ப் பெருந் தக்கோர்களைச் சங்கத் தொண்டர்கள் வரவேற்ற சிறப்புப் பெரிதும் இறும்பூது பயப்பதாயிற்று. தொண்டர் பால் தோன்றிய பணிவும், அவர் கண்வழி வழிந்த தமிழன் பும், வாய்வழி ஒழுகிய இன்னுரையும் தமிழன்னையின் பெருமையினையும், நம் சங்கம் சென்ற இருபத்தைந்தாண்டு களாக ஆற்றிய தொண்டின் அருமையினையும் இனிது விளக்கின.

சங்கத்தின் முன்றில் தொடங்கி, வடவாற்றின் மாவிலக் குமி பாலக்கரை வரையில் புதுமணல் பரந்த பூம் பந்தர் நீழல் செய்ய, இடந்தொறும் இடந்தொறும் காட்சிச் செடிகள் கான்புதலென மென்கால் உதவ, வான்படரும் விண்மீனென மின்செய்விளக்கினம் நன்னர் ஒளிர, ''நகலின் இனிதாயின் காண்பாம், உம்பர் உறைவார்பதி'' என்ற நாலடியார் திரு மொழியின் வாலிதாம் நிலைமை வந்தோர் உள்ளத்து வாயாய்த் திகழ்ந்தது.

தமிழ்ப்பெருமன்றத்திற் கூடியிருந்தார்க்கேயன்றி, இட மின்மையாற் பந்தர்க்கீழ்த் தங்கிய மூவாயிரவர்க்கும் விழாவின் சொற்பொழிவு நிகழ்ச்சி இனிது கேட்குமாறு ஒலி பரப்புக் கருவிகள் அமைக்கப்பெற்றிருந்தமையால், சங்கக் கட்டிட எல்லைக்குள் எம்மருங்கும் சொற்பொழிவு கேட்கும் செம்மை நலம் உளதாயிற்று.

வந்திருந்தோர் பலருள் நம் சங்கத்தையும் சங்கத் தொண்டர்களையும் முன்னமே அறிந்தாரொழிய, அறியாதார்

பலரையும், தமிழ் வழங்கும் தக்கோரெனும் தகுதியுடைமை யால், தமிழ்த் தொண்டர் படையினர், பண்டே அறிந்தார் போல வரவேற்றதும், அவர் தம் உடைமையினைப் பாதுகாத்ததும், அவர் தம் குறிப்பறிந்து ஏவல் செய்ததும் பேங்களூரி லிருந்து வந்திருந்த பேரறிஞர் ஒருவர் உள்ளம் முற்றும்கவர்ந்து கொண்டதன் பயனாக, அவர் "யான் அகில இந்திய பெருங் கூட்டங்கள் பலவற்றிற்குச் சென்றிருக்கின்றேன்; நன்கொடை புரிந்தாரது கொடையளவின்பெருமை சிறுமைகட் கேற்பவோ, வந்திருந்தோர் உயர்வு, பதவி முதலியவற்றிற்கேற்பவோ, உப சரிக்கப்படுவது கண்டிருக்கின்றேனேயன்றி, இச்சங்கத்திற் போல, வந்திருந்தோர் யாவராயினும், அவரை உடன்பிறந்து, உடன் உறைந்து, உடனொழுகி, உண்மையன்பால் உயர்ந்தார் போல, உவகை துளும்ப, உபசரித்தது கண்டதே இல்லை; இத்தமிழ்த் சங்கத்தின் தொண்டு நெறியை ஏனைச் சங்கங் களும் கைப்பற்றுமேல், ஆ! நம் நாடு நல்லிசை நிறுவிய நன்னாடு என்னும் நலத்தகு புகழினை இன்றே, இன்னே, பெறும் என் பதில் சிறிதும் ஐயுறவேண்டியதேஇல்லை" என்றனர்; எனவே, தொண்டர் படையின் தமிழ்த் தொண்டு தமிழ்ப் பெருமக்க ளின் பாராட்டிற்குரிய பெரும் பொருளாயிற்றாம்.

சங்கத்தின் உறுப்பினருள், திங்களொன்றிற்கு முந் நூறும், நானூறுமாகிய ஊதியம்பெறும் உத்தியோகத்தரும் உளர்; அவர் தாமும் தம்மை மறந்து, தமிழ் மக்கட் கூட்டத் தின்முன், தம்மைத் தொண்டர்க்குத் தொண்டராம் தகுதி யுடையரென நினைந்து, உணவு பரிமாறுதல் உண்பார்க்கு உவகை தருவனகூறல், உண்ணீர்வழங்கல், உண்கலம்திருத்தல் முதலிய பணிபலவும் மனங்கனிந்தாற்றினர்.

இனித் தமிழ்ப் புலவர் கூட்டத்தைப்பற்றி ஒன்றுகூறி நிகழ்ச்சி நிரலுக்குப் புகுவோம். தமிழ்ச் சங்கமென்றவுடமே, கேட்போர் மனத்தே தமிழ்ப்புலவர் தோன்றுவர். அன்னோர் கூட்டம் பேரளவிற்றாய்ப் பெருகியவழி, அவர்களிடையே தத் தம் புலமைச் சிறப்புக்குரிய சொல்லாடல், அவர் தம்மையும் கைகடந்து நிற்கும் காட்சியாகும். வியாழக்கிழமை மாலையில் அரும்பி, அன்று இரவெல்லாம் போதாகி, வெள்ளி முளைத்த விடியலில் மலர்ந்து மூன்று நாளும் முருகு விரித்தொளிர்ந்த புலவர் சொல்லாட்டு, பண்டும், இன்றும், என்றும், நின்று நிலவும் நம் பைந்தமிழன்னைக்குப் பல்லாண்டுகூறிப் பரவுவது

போலிருந்ததென யாம் சுருங்கக்கூறின், இதனைப் புனைந்துரை என்று கருதுவோர், தம் கருத்தின் புன்மையினைக் காண்போரே யாவர். எம்மருங்கும் தமிழரங்கு; எம்மொழியும் தமிழ் மொழி; எப்பேச்சும் தமிழ்ப்பேச்சு; எத்தொண்டும் தமிழ்த்தொண்டு; எப்பாட்டும் தமிழ்ப்பாட்டு; எவ்வெவரும் செந்தமிழர்; எங்கும் எவையும் எல்லாம் தமிழே.

## வெள்ளிக்கிழமை (15—4—38)

விடியல் வந்தது; சங்கக் கட்டிடப் பரந்த எல்லைக்குள் பூம்பந்தர், புனையோவியம், காட்சிச்செடி, தமிழறவுரை முதலிய செயற்கைகளால் கைசெய்து காண்பார் கண்கட்கு விருந்தயர, தமிழன்னை தன் இயற்கை வடிவை அறிஞர் தம் அறிவுக்கண்ணில் ஆரக்கண்டு அயராவின்பத் தேன்பருகுவித்தனள். திருநீறும் திருவக்கமாலையும் புனைந்து, சிவநாமத்தைத் திருவாய் பொலிய ஓதுநரும், திருமண் அணிந்து செம்பட்டுடுத்து, திருமாலின் திருவருள் நினைந்தோதுநரும், பிறரும் தம்மனக்கினிய வழிபாடியற்றிமகிழ்ந்த உள்ளத்தராய், உண்பனஉண்டு, உடுப்பனஉடுத்து, வெள்ளிவிழாவின் ஒள்ளிய நிகழ்ச்சியின் தொடக்கத்துக்குரிய காலம் நோக்கிநிற்ப, செஞ்ஞாயிறும், தன் பசுவெயில் பரப்பிக் கீழ்த் திசையில், சங்கக் கட்டிடங்களின் கூரை விளிம்பைத் தடவி நின்றான்; காலை மணியும் எட்டாயிற்று.

நம் சங்கத்தலைவர் திரு. செந்தமிழ்ப்புரவலர் அவர்கள், அமைச்சரும், ஏனைத் தமிழ்ப் பெருஞ் செல்வர்களும் புடைசூழ்ந்துவர, சங்கமாணவச் சிறார்களும், தொண்டர்களும் அணிவகுத்துச்செல்ல, பல்லியம் எழுந்து மங்கலமுழங்க வெள்ளிவிழாத் தலைவராய் எழுந்தருளிய மெய்ஞ்ஞானச்செல்வமும் செந்தமிழ்ப் பெரும்பொருளும் குறைவற நிரம்பிய அடிகள், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்த பேரகத்துக்குச் சென்று, அடிகளின் திருவடி விளக்கி, பூப்புனைந்து, கருந்திட்டைக்குடி ஆவணத்தெரு வழியே ஊர்வலம் செய்து நம் சங்கத்தின் செல்வக்கட்டிடத்துக் கழைத்துவந்தனர். அடிகள் முன்றிலில் வந்து நின்றதும், ஏனை, இயவொலி நிற்க, சங்கச்சிறுவர்கள் தேனெனப் பாலெனச் சின்மொழி மிழற்றும் பச்சிள நாவினாற் பல்லாண்டும் வாழ்த்தும்போதுள, தமிழ்த்தாயின் தனிச்சிறப்புத் தலை

சிறந்து விளங்க, இன்றமிழ்ப்பாக்கள் பல பாடிச்சென்றனர். தலைமைதாங்கும் அண்ணல், தமிழ்ப்பெருமன்றத்தின் தலைமை மேடையில் எழுந்தருளினர். மன்றத்தின் அகத்தும் புறத்தும் தமிழ்ப் பெருமக்கள் குழீஇ யமர்ந்தனர். ஒலிபரப்புக் கருவிகளும் உவகை கூர்ந்தனபோல, மன்றத்தின் அகத்து நிகழும் சொன்னிகழ்ச்சிகளைப் புறத்திருந்த பெருமக்கள் செவி நிறைய உரைக்கும் சீர்த்தியமைய இருந்தன. பின்னர்ச் சங்கத்தலைவர் விழாநிகழ்ச்சிக்குரிய முன்னணி யலுவல்களால் மெய்தளர்ந்து உடல்வலி குறைந்து காணப்படினும், மனவலி சிறிதும் குன்றாது தமக்கு இயல்பாக வாய்த்துள்ள செந்தமிழ்ப் பெருநலத்தால், அடிகளையும், ஏனைத் தமிழ்ப் பெருமக்களையும் தென்னுண்தேனில் தேக்கிய செஞ்சொற் பெருமழை பொழிந்து வரவேற்றனர்.

நிகழ்ச்சிநிரலிற் குறித்தாங்கு வணக்கமும் வாழ்த்தும் வளம்பெற முடிந்ததும், சங்க அமைச்சர், திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் அறிக்கை படித்தனர்; இதற்குள், சங்க உறுப்பினர் திரு. உலகவூழியரவர்கள், விழாத் தலைவர் அவர்கட்கு அளித்த வரவேற்புரையினைக் கேட்டார் மகிழப் படித்து வழங்கினர்.

இவ்வாறு, வெள்ளிவிழா அயரும் நம் சங்கத்தால் வரவேற்கப்பெற்ற தலைமைப் பெருமகனாரும், தமிழ்ப் பெருமக்களும் இனிதிருந்தவழி, தலைவர் குறிப்புக்கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர், திரு. எஸ். சோமசுந்தரபாரதி எம். ஏ. பி. எல். அவர்கள், சங்கத்தலைவர், செந்தமிழ்ப்புரவலர், ராவ்சாகிப் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை பி.எ; பி.எல்; அவர்கட்கு, 'தமிழவேள்' என்னும் தமிழியற் பட்டமொன்று வந்திருந்த பேரவையின் சார்பாக வழங்கப்பெறுகிறதென முன்மொழிந்தனர். அதனைப் பின்பற்றி அப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் (Professor of History) திரு. சி. எஸ் சீனிவாசாச்சாரியார் எம். ஏ; அவர்கள், சங்கத்தலைவரின் இப்பட்டப் பேற்றிற்குரிய தகுதிப்பாட்டினை உரைத்தனர். தென்னார்க்காடுஜில்லா கல்வித் துறைத்தலைவர் (District Educational Officer) திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பி. எ; எல். டி; அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர்கள், பண்டிதமணி, திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், சென்னைப்

பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர் திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை பி. எ; பி. எல்; அவர்கள், கரந்தை, திரு இராவ்சாகேப். ஐ. குமாரசாமிப்பிள்ளை பி. எ; அவர்கள் ஆகிய தமிழ்ச் சான்றோர்கள் வழிமொழிய, தமிழ்ப்பேரவையினர் அனைவரும் தமது கருத் தொருமையினை வெளிப்படுக்கும் கருவி பிறிதொன்றும் இன் மையால், தம் கையோசை யெழுப்பிப் பேரின்பத்தில் திளைத் தனர். பின்னர், அடிகளவர்கள், தமிழவேள் என்ற பட்டப் பெயரின் சொற்பொருளை இனிது விளக்கி, இப்பட்டத்தைப் பெறுமகனுரான சங்கத் தலைவரை வாழ்த்துக் கூறுங்கால், தாம் நாளும் முருகவேளை வழிபட்டபின், நம் நாட்டு நல்லோர் பலரைத் தம் நெஞ்சத்தே உள்ளுவது வழக்கமென்றும், அப்பலருள் முதல்வ ராக உள்ளப்பெறும் சிறப்புடையவர் இச்சங்கத் தலைவரே என்றும் கூறி வாழ்த்தி அப்பட்டத்தின் சின்னமான பொற்பதக்க மொன் றனைத்தந்தருளினர். தலைவர். த. வே. உ. அவர்கள் அடிகளின் திருவடியில் அப்பேரவைப் பெருமன்றத்தே வணங்கி அவற் றோடு திருநீறுபெற்றுத் தம் உருவார அணிந்து தம் உள்ளங் குளிர்ந்தனர்.

பின்னர், பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் இச்சங்கம் தோன்றிய நாள்தொட்டு அமைச்சராய்த் தொண் டாற்றியதோடு, செந்தமிழ்த் தீஞ்சொற்களாலாகிய இன்கவித் தொண்டுபுரிந்த திரு. ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குக் 'கரந்தைக் கவியரசு' என்னும் தமிழியற் பட்டமொன்று இவ்விழாப் பேரவைப்பெருமக்களால் வழங்கப்பெறுகிறதென முன்மொழிந்தா ராக, திரு. ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் திரு. பிள்ளையவர் களின் கவி நலமும், கவியமைக்கும் திறமும் பேரவையுணர விளக்கிப்பின்மொழிய, தமிழ்க்கவிகளின்இன்பச்சுவை நலமே தேர்ந்து தாமின்புறுவது உலகின்புறக்காணும் செய்கை நல முடைமையினைச் சிறப்பித்து, பட்டமளிப்பினைப் புலவர்பலர் வழிமொழிந்தனர். பேரவையினர் தம்கருத்திசைவைத் தம் பெருமதிப்போசையால் விளக்கியமைந்தனர். திரு. பண்டித மணியவர்கள், தாம் கரந்தைக்கவியரசு என்னும் இப்பட்டத்தை வழங்குவது குறித்து நிகழ்த்திய முன்மொழியின்கண் கரந்தைக்கவியரசு, திரு. பிள்ளையவர்களின் கவிநலம் கூறு மிடத்து, இக்காலத்து நிலவும் தமிழ்ச் சந்தப்பாக்கள் பலவும் வடசொற்களே விரவியிருக்கின்றன; தூய தமிழ்ச்சொற்களா லாவன இல்லை. என்னையும் பலர் சந்தப்பாக்கள் ஆக்க வேண்டுமென்பர்; யானும் தூய தமிழ்ச் சொற்களாற்

சந்தப்பாக்கள் அமைக்க முயன்றதுண்டு; ஆனால் யான் அத்துறையில் தோல்வியடைந்ததேயன்றி, அது முடியாது என்ற துணிபும் கொண்டேன். நம் திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தூய தமிழ்ச் சொற்களால் எல்லா அழகும் நிரம்ப அமைந்த சந்தப்பாக்கள் பல செய்திருக்கின்றார்'' எனக்கூறியது ஈண்டுக்குறிப்பிடத்தக்கது.

தலைமைதாங்கிய அடிகள் திரு. பிள்ளையவர்களை வாழ்த்தியபோது, அவர் இயற்றியுள்ள ஆசாற்றுப்படை, தமிழ்த் தாய் வாழ்த்து, வரவேற்புப்பாக்கள் முதலியவற்றின் பல் வகை நலங்களைப் பாராட்டிக்கூறுமாற்றால் அவர்தம் தகுதிப் பாட்டினைத் தீவிய சொற்களால் நன்குவிளக்கி அதற்கறிகுறி யாகிய பொற்பதக்கத்தால் அணிசெய்து கரந்தைக் கவியரசு எனும் பட்டத்தை வழங்கினர். பின்னர் தமது தலைமைப் பேருரையினைத் தமிழ் தொன்மையுடையது, இலக்கண முடையது, பெருவழக்குடையது என்பன முதலிய பல்வகைப் பாகுபாட்டின் கீழ் ஒருமணிநேரம் யாவரும் இன்புற எடுத்தியம்பி இனிதமர்ந்தனர். முற்பகல் நிகழ்ச்சி இவ்வகையில் முற்றுப்பெற்றது.

பிற்பகல் விழா, மாலை 3 மணிக்குக் குறித்தவண்ணம் தமிழ்ப்பெருமன்றத்தில் நிகழ்வதாயிற்று. மாலை 2 மணிக்கே தமிழ்ப் பெருமக்கள் பலரும் மன்றத்திலும், மருங்கேயமைத்திருந்த பந்தர்களிலும் தமிழ்மழை நோக்கிய செந்தமிழ்ப் பைங்கூழ்போல் விழா நிகழ்ச்சியின் தொடக்கத்தை எதிர் நோக்கியிருந்தனர். வேனிற்காலமாகலின், வெயிலின்வெம்மை மிக்குத்தோன்றிற்றாயினும், தமிழ் விழாவின் பந்தர்செய்த தண்ணிய நிழல், யாவர்க்கும் இன்பங்கிளர்வித்து வெயிலின் உண்மை காணாவகை உவகை பயந்தது. குறித்தவாறு மணி மூன்றாயதும், தலைமை தாங்கும் அடிகளார் எழுந்தருளினர். நிரலிற் குறித்தவாறு கடவுள் வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்துக்கள் முதலியவற்றைச் சங்கமாணவர்கள் நிகழ்த்தினர்.

வெள்ளிவிழாவின் நினைவுமலராக, புலமைமிக்க அறிஞர்கள் எழுதி உதவிய கட்டுரைகளைத் தொகுத்து இலக்கியப் பூங்கொத்தென மிளிரும் கரந்தைக் கட்டுரை எனும் நூலை சங்கத்தார் வெளியிட்டனர்.

முதலிற் கல்லூரி மாணவர்களுட், சென்ற தேர்தல்களிற் சிறப்புடன் வெற்றிபெற்ற மாணவர்கட்கு அடி

ளார் பரிசுவழங்கிப் பரிசுபெற்ற அம் மாணவர்கட்குப் பாராட்டும் வாழ்த்தும் பகர்ந்தருளினர். சொற்பொழிவுக்கென முதலிற் குறிக்கப் பெற்றிருந்த திருவனந்தபுரம் திரு. சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் எம். எ. பி. எல். அவர்கள் தனது உறவினருக்குற்ற பேரிடரால் வரக்கூடாது போனமையின், அங்கிலேயில், சங்கக்கல்லூரி தமிழ்விரிவுரையாளர் வித்துவான் திரு. வெள்ளைவாரணனுர் அவர்கள், ''தேவார ஆசிரியர்கள் தமிழ்த் தொண்டு'' என்னும் பொருள் பற்றியும், அண்ணுமலைப்பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், திரு. எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள் ''தமிழர் ஒழுக்க அடிப்படை அறங்கள்'' என்னும் பொருள்பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவை பின்னர்த் தனித்தனியாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

இவ்விரண்டு சொற்பொழிவுகட்குப்பின் தலைவராய அடிகளார் யாவரும் வேட்பமொழியும் சொல்வன்மைத் திறன் நிரம்பிய தம் முடிப்புரையின்கண், தேவார ஆசிரியர்களின் சிறப்பியல்புகளையும், அவர்கள் நம் தமிழ்மொழிக்குத் தேடி வழங்கிய அருட்பாக்களின் செம்பொருட் பண்புகளையும் இனிது விளக்கியருளிஞர்கள். சொற்பொழிவு ஆற்றிய திரு. வெள்ளைவாரணனுரின் இளமைப் பண்பினையும், தமிழ்த்தொண்டினையும்பாராட்டி, இக்காலத்துத் தமிழிளைஞர்கள் தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும் ஒருங்குடையராதல் வேண்டுமெனவும், சமயப் பற்றினல் உளதாகும் அறிவொட்பம் பிறவற்ருல் எய்துதல் அரிதெனவும் வற்புறுத்தி, வந்திருந்த பெருமக்கள் மனத்தில் சமயப்பற்று வேரூன்றுமாறு மொழிந்தருளிஞர்கள். பின்னர், திரு. பாரதியாரவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் பொருட் பாகுபாட்டினைத் தொகுத்தும் வகுத்தும், ஒவ்வொரு பகுதிக்கண்ணும் வற்புறுத்தவேண்டியிருந்தவற்றை நிரம்பிய மேற்கோள்களால் மெய்ப்படுத்தியது கேட்டோர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. தமிழர் மேற்கொண்ட துறவு நெறிக்கண் அமைந்து கிடந்த நுண்பொருள்களை யாவரும் அறிய வெளிப்படவிளக்கி, நூலாராய்ச்சி செய்வோர் இவற்றை யாராய வேண்டியதற்கான கருவி பலவும் காட்டித் தம் முடிப்புரையினை நலமுற முடித்தருளிஞர்கள். இந்நிலையில் மணி 7-30 ஆயது. அடுத்து நிகழவிருந்த நாடக நிகழ்ச்சிக்கிடையே அரைமணிநேர ஓய்வு வழங்கப்பெற்றது. மாலைக்கடன் முடித்துத் திரும்பிய அவையினர் பலரும் பெருமன்றத்திற் செவ்வணம் கூடியிருந்தனர். இருக்க,

இரவு 8 மணிக்குத் தஞ்சைக்குமரகானசபையார் அடிகள் தலைமையின் கீழ், "திருநாளைப்போவார்" என்னும் நாடகத்தை மிக்க திறம்பட நடித்துக்காட்டினர். அது கண்டார் காட்சி விருந்தாய், பலநாடுகளிலிருந்தும் போந்திருந்த தமிழ்ப் பெரு மக்கள் கண்டு இன்புறுதற்குரிய இனிய நிகழ்ச்சியாய் யாவரையும் மகிழ்வித்தது. அச் "சபை"யின் திறனைப்பாராட்டி, தமிழ்ச் சங்கத்தார் வெள்ளிக் கிண்ணமொன்றை அதற்குப் பரிசுவழங்கினர்.

இவ்வாறு, இயற்றமிழின் இன்பவிழாவாய்க் கால் கொண்ட நம் சங்க வெள்ளிவிழாவின் முதனாள்விழா, நாடகக் காட்சி வழங்கும் நாடகத்தமிழ்விழாவாய் இனிது நிறைவெய்தியது. அடிகள் வழங்கிய முடிப்புரைக்குப்பின் தமிழ்ப் பெருமக்கள் தத்தம் இருக்கையடைந்தனர்.

செவியுணவாற் பகல் முற்றும் செம்மாந்து தேக்கெறிந்த தமிழ்ச் செல்வர்கள், வாயுணவுகொண்டு, நம் சங்கக்கட்டிடப் பரப்பில் கண்படல் மேவினர். உறங்கினர் உறங்க, விழித்திருந்தார் பலரும் விழாவின் சிறப்பும், தமிழ்நலமும், தமிழ்த் தொண்டின் உறைப்பும், தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பிற குறிப்புக்களும் பேசி மகிழ்ந்தனர்.

## சனிக்கிழமை (16—4—38)

செந்தமிழ்த்தாயின் திருவருள் நலத்தால், நம் சங்க வெள்ளிவிழாவின் இரண்டாம் நாளையவிழா, சனிக்கிழமை (16—4—38) காலை 8 மணிக்கு முன்னாளிற்போல குறித்த காலத்தில் அடிகளார் தலைமையில் நடைபெறுவதாயிற்று. விழாவைக்காணும் வேட்கையால், பேரவைப் பெருமக்களின் தொகை பெருகுவதாயிற்று.

ஒலிபரப்புக் கருவிகள் நுட்பமும் ஒட்பமும் உடையவாய், மன்றத்தின் அக நிகழ்ச்சியினைப் புறத்திருந்தார் கேட்டற் கில்லையேயென ஏக்கறுவாறு, அகத்தெழும் சிற்றோசையினையும், புறத்திருந்தார் செவியகம் குளிர இசைத்து மகிழ்ச்சி மிகுவித்து நின்றன. கடவுள் வணக்கமும், தமிழ்த்தாய் வாழ்த்தும் நடைபெற்ற பின், கரந்தைத் தமிழ்க் கல்லூரித்

(Karanthai Tamil College) திறப்புவிழாத்தொடக்கிற்று: முதற்கண், நம்சங்கத்தலைவர் அவர்கள், கரந்தைத் தமிழ்க் கல்லூரியின் குறிக்கோள்களைக் குறித்துப் பேசுமிடத்து, பின்வரும் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

1. தமிழிற்கெனத் தனியே அமைக்கப்படும் இக்கல்லூரியில், சென்னைப்பல்கலைக்கழகத்தார் ஏற்படுத்தியிருக்கும் "பிரவேசம்," முதற்றேர்வு, (Preliminary) முடிவுத்தேர்வு (Final) என்ற தேர்வுகட்கு மாணவர்கள் தமிழ் பயிற்றப்பெறுவர்.

2. குறைந்தது நான்காவது பாரமாவது கற்றுள்ள மாணவர்களே இக்கல்லூரியில் சேர்க்கப்பெறும் தகுதியுடையவராவர்.

3. தனித் தமிழேயன்றி, மருத்துவம், இசை, ஓவியம், கைத்தொழில் முதலியவை துணைப்பாடமாகக் கற்பிக்கப்பெறும்.

4. மாணவர்க்கு உண்டியும் உறையுளும் பிறகல்வி நலங்களும் அளிக்கப்பெறும்.

5. மாணவர்கள் ஐந்தாண்டுகள் கல்லூரி பயிற்சி பெற்றுத் தேறியபின், இரண்டாண்டுகள் கிராமத்தொண்டில் பயிற்சி தரப்பெறுவர்.

6. இக்கல்லூரியிற் பயின்று வித்துவான் பட்டம்பெற்று வெளியேறும் மாணவர்கள் ஆசிரியர்களாவதொன்றையே நாடாது, வேறு தத்தமக்கேற்ற தொழில் ஒன்றினைத் திறம்பட மேற்கொண்டு, தன் மதிப்புடன் வாழ்க்கை நடத்துபவர்களாதல்வேண்டும்.

7. வரும் 1939-ஆம் ஆண்டுப் பிரவேசத்தேர்வுக்கு ஏறத்தாழ முப்பது மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சி தந்து, தேர்வுக்கனுப்புதல்வேண்டும், என விண்ணப்பித்தனர்.

இன்னோரன்ன சீரியகருத்துக்களை மேற்கொண்டுதொடங்கும் இக்கல்லூரிக்கு அருட் செல்வர்கள் முன்னின்று பொருளுதவி புரியவேண்டும்.

அதனைத் திறந்துவைக்கும் சிறப்புப்பூண்ட, தென்னார்க்காடு ஜில்லா கல்வித்தலைவர், திரு. S. சச்சிதானந்தம்பிள்ளை

யவர்கள், தமிழரல்லாதார்க்கும் நம் தமிழ்மொழிக்கண் ஆர்வமும், அதன் வளர்ச்சிக்கண் பேரூக்கமும் கிளர்ந்தெழுமாறு தமது திறப்புப் பெருமொழியினைச் செய்தருளினார்கள்.

பின்னர், இக்கல்லூரித் திறப்புப் பொருளாக, திருச்சி, திவான்பகதூர் திரு. டி எம். நாராயணசாமிப்பிள்ளையவர்கள் M.A. B L, திருவையாற்று அரசர்கல்லூரித்தலைவர் திரு. Dr.S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள், கரந்தைக்கவியரசு, திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், தென்னூர் ஓய்வுபெறும் பொறிவல்லுநர் (Retired Engineer) திரு. S. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள், சாத்தூர், வழக்கறிஞர், திரு. டி. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள், பண்டிதமணி, திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், பண்டித, திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், சென்னை, திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் முதலிய தமிழ்ப்பெருமக்கள் கல்லூரியின் இன்றியமையாமை, இக்கால நிலைக்கேற்பத் தமிழர் வாழ்க்கை திருந்தவேண்டியநெறி, தமிழ் கற்பித்தற்குரியமுறை, அம்முறையை அறிதற்குரிய பயிற்சி முதலிய பொருள்களை வற்புறுத்தினராக, அடிகளார் அவர்தம் பொருளுரைகளை அழகு மிகத் திரட்டி, கல்லூரியைத் திறந்தருளினார்கள்.

அதுபோது திருபண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

நன்மாணவராகும் வண்டர் நனிபயின்று
பன்மாண் கலைத்தேன் பருகுமா—மண்மாண்
கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரிப் பூங்காப்
பரந்தொளிர்ந்து வாழியர்இப் பார்

எனப்பாடி வாழ்த்தினர்.

கல்லூரிக்கட்டிடத்தில் எழுந்தருளப் பெற்றிருந்த தமிழ்க்கடவுளாகிய முருகன் திருவுருவத்துக்கு வழிபாடியற்றப் பெற்றது. திரு. வித்துவான். வெள்ளைவாரணனை ஆசிரியராக நிறுத்தி, அதுபோது கூடியிருந்த மாணவர்க்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்குமாறு பணித்தலும், அவர் நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் வழங்கியருளியுள்ள திருக்குறளின் தலைக்குறளாகிய "அகரமுதல" வென்னும் அருமைத் திருக்குறளைக் கற்பித்தனர். பின்னர், அடிகளார், புதிதாய்த் தோன்றிய கல்லூரியை வாழ்த்தி, அகரமுதல

வெனத் தொடங்கும் திருக்குறளின் பருப்பொருளும், நுண் பொருளும் இனிது விளக்கித் தம் முடிப்புரையை நிகழ்த்தி யருள, அன்றைய முற்பகல் நிகழ்ச்சி முடிபெய்தியது.

இவ்வாறு தமிழ்வளர்ச்சி குறித்துப் பெருந்தொண்டு புரியும் இச்சங்கத்தின் நோக்கங்களை நன்கு கண்டு உவகை கூர்ந்த பெருந்தகைகள் பலர் சீரிய நன்கொடை பல வழங்கி னர். அவருள், போடிநாய்க்கனூர், இராவ்சாகிப் திரு. A. S. அழகண்ணன் செட்டியார் M. L. A. அவர்கள் ரூ. 1000, இலால்குடி, திரு. T. N. பரமசிவன்பிள்ளையவர்கள் ரூ. 1000, திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயில் திருப்பணிச்செல்வர், நச்சாந்துபட்டி, திரு. பெ. ராம. ராம. சிதம்பரஞ்செட்டியா ரவர்கள் ரூ. 1000மும் நன்கொடை வழங்கியருளினர். தஞ்சை நகரசபைத் தலைவர், S. A. S Rm இராமநாதன் செட்டியார் அவர்கள் ரூ. 1000 தருவதாக வாக்களித்தனர். மேலைச் சிவபுரி, திரு. அ. மு. பழ, சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் ரூ. 250, பாகனேரி திரு. வெ. பெரி. பழ. காசி விசுவநாதன் செட்டியார் ரூ. 250, சென்னை திரு. P. இராம சாமிபிள்ளை ரூ. 250, பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் ரூ 100, பண்டித திரு. ந. மு. வேங் கடசாமி நாட்டார் அவர்கள் ரூ. 100, சென்னை, திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் ரூ. 100, சைவப்பெருந்திரு அடிகள், சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் ரூ. 100, வேந்தன்பட்டி திரு. குப. அரு. ந. நடராசன் செட்டியார் ரூ. 100, கிழக்குமருதூர் திரு. தி. கி. நாராயண சாமிநாயடு ரூ. 100, திரு. குமரப்பச்செட்டியார் ரூ. 100, மதுரை திரு. இ. மா. கோபாலகிருட்டினக்கோனார் ரூ. 50, திரு. C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் ரூ. 25, திரு. S. நடேசபிள்ளை B.A., B.L, ரூ. 25, வி. மு. சோமசுந்தரம் ஆசிரியர் ச. சரவண முத்தையரின் நினைவுக்கறிகுறியாக ரூ. 25 நன்கொடை தந்துதவினர்.

திருச்சிராப்பள்ளி. திருவாளர். T S. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் தாம் நடத்தி வருகிற அறநிலை வைப்புநிதி யின் வருவாய் எண்ணூறு ரூபாவுக்குக் குறையாத தொகை களும் கரந்தைக் கல்லூரிக்கே ஆகிவருமாறு தருமசாசனம் எழுதிமுடிக்க எண்ணியிருப்பதாகத் தெரிவித்தனர்.

கோனுப்பட்டு திரு. P. S. T. V. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் வெள்ளிக்கிண்ணமொன்றனை வெள்ளி விழாநன்கொடையாக உதவினார்கள். தஞ்சை ஐயங்கடைத் தெரு J. A. அப்துல்ரஹீம் அவர்கள் சவ்வாதுமாலை ஊது பத்தி முதலிய மணப்பொருள்களை நன்கொடையாக வழங்கினார்கள்.

முதல்நாளிற் போலவே, பிற்பகல் மாலை 3 மணிக்கே தமிழ்ப்பேரவைக்கண் ஐயாயிரத்தின் மிக்க பெருமக்கள் குழுமியிருந்தனர். அன்று முற்பகலில் தெரிவித்த வண்ணம் 3-30 மணிக்குப் பிற்பகல் விழா தொடங்குவதாயிற்று. தலைமையடிகள் தமிழ்ப்பெருமன்றத்தின் தலைமையிருக்கையில் எழுந்தருளியபின், சங்க மாணவர் வாழ்த்தும் வணக்கமும் ஆற்றிநிற்ப, தலைவர் பணித்த முறையே, சங்கத்தொண்டர்கள் ஒலிக்கருவி முன்னின்று சொற்பொழிவாளர்களின் பெயரும் பொருளும் வெளியிட்டனர். பின்னர், வேலூர், பாரதநாட்டுத் திருமாலடியார் திருப்பெருமன்றத் தலைவர், திரு. வே. ஆழ்வார் இராமாநுச நாயகியார் அவர்கள், "திருநாவீறுடைய பிரானும் தெய்வத் தமிழ்மறையும்" என்பது பொருளாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியபின், பண்டித, திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்னும் பொருள்பற்றியும், பண்டித மணி, திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள், "சிலப்பதிகாரச்சுவை நலம்" என்னும் பொருள்பற்றியும் தீவிய செந்தமிழ்ச்சொற்பொழிவுத்தேனைக் கேட்டார் செவிவழிப் பெய்து இன்புறுவித்தனர். அவைத்தலைமை தாங்கிய அண்ணல் அடிகளார், திருநாவீறுடைய பிரான் என்ற சொற்றொடரின் பொருளைத் திருவாய்மொழியின் செம்மை நெறியால் இனிது விளக்கி, இத்தொடரின்கண் உள்ள சொற்கள் ஐந்தும் குறிக்கும் ஐவகை மந்திரப் பொருளையும், அவற்றால் உய்த்துணர்த்தப்பெறும் பொருள் நலங்களையும் வகுத்துரைத்து, சுந்தரர் செந்தமிழின் செம்மைப்பண்புகளை மிக்க நலம் பெறக் காட்டி, சிலப்பதிகாரச் சுவை நலத்தை ஏனைவடநூற்காவியச் சுவைகளோடு ஒப்பு நோக்கி, சிலப்பதிகாரத்தின் சீர்மையினை விரியவுணர்த்தி, கேட்டார் மீட்டும் கேட்டற்கு விழைந்து வக்குமாறு தம் முடிப்புரையினை வழங்கியருளினர். கூட்டம் அடுத்து நிகழ்தற்கெனக் குறிக்கப்பெற்ற இசையரங்கிற்கு இனிதிருந்து மகிழ்தல்வேண்டி, இரவு 8 மணிகாறும் ஓய்வு தரப்பெற்றது.

விழா நிகழ்ச்சியின் காட்சியாலும், சொற்பொழிவின் கேள்வியாலும் வீறு மிகுந்திருந்த பேரவையினர் குறித்த காலத்தில் தமிழ்ப் பெருமன்றம் தழைப்ப மேவியிருந்தனர்.

தலைவர் தலைமையிருக்கையில் எழுந்தருளியதும், திருவனந்தபுரம் திரு. டி. இலக்குமணப் பிள்ளையவர்கள் B A, தம்மாணவியர் இருவர் உடனமர இசையரங்கத்தில் வீற்றிருந்தனர். அவர் வீணையில் தாம் ஆக்கியுள்ள இனிய தமிழ்ப்பாக்களை எடுத்துக்கொடுக்க, அவரது மாணவியர் தமது இனிய குரலால் எடுத்தல், படுத்தல், ஏந்தல், தூங்கல் முதலிய இசைநலம் சிறக்கப்பாடினர். தோடி, பைரவி, சண்முகப் பிரியா முதலிய பல இராகங்களை எடுத்தேந்தி உறழ்ந்தும் உந்தியும் பாடியதும், இடையிடையே, பாட்டுக்களின் பொருளையும் நயங்களையும் பேரவையினர்க்கு உரைத்ததும், தாம் அறியாமையேயன்றி, கேட்டாரும் அறியாமையிருளிற் கிடந்து உழலுவித்து, தாம் அறியாத மொழிப்பாட்டுக்களைப் பாடி, ஒலிக்குற்றம், மெய்ப்பாட்டுக்குற்றம், பொருளறியாக் குற்றம், பொருளுணர இசையாக்குற்றம் முதலிய குற்றமே நிரம்பப்பெற்றும் பேதைப் பாடகர்கள். தம்மடமையுணர்ந்து தண்டமிழ்ப் பாட்டுக்களின் தகைமையோர்ந்து இனிப்பாடுதல் வேண்டுமெனும் துணிவினை அவர்கள் மனத்தில் பிறப்பித்தன என்றல் உண்மையுரையாகும்.

இரவு ஒன்பது மணிக்குத்தொடங்கி, பன்னிரண்டுமணி வரையில் நிகழ்ந்த இசையரங்கத்தின் இன்பச்சிறப்பினை வியந்து பாராட்டிய அடிகள் "செவிச்சுவையமுதின்" செம்மை நிலையினைப் பேரவைக்குணர்த்தி, புலமை நிரம்பிய திரு. பிள்ளையவர்களின் இசைப்புலமையை நன்குபாராட்டி அவர்தம் மாணவியர்க்கு வாழ்த்துரை வழங்கினர். சங்கத்தினர் திரு. பிள்ளையவர்கட்கு வெள்ளித் தட்டொன்றினையும், மாணவிகள் இருவர்கரும் இரண்டு தட்டங்களையும் பரிசு வழங்கினர்.

### மூன்றாவதுநாள்

### ஞாயிற்றுக்கிழமை (17—4—38)

நம் சங்க வெள்ளிவிழாவின் மூன்றாநாள் விழா இன்று காலை 8 மணிக்குத் தொடங்கிற்று. முன்னைய இரண்டு நாட்களிலும் மிக்க தொகையினராக ஆண்மக்களும் பெண்மக்

க்ளும் பெருகினர். தமிழ் நலம் கெழுமிய பேரவையினர் நாழிகைதோறும், பேரன்பு பெருகித் தம்மையும் தக்கட்குரிய ஏனை அலுவல்களையும் மறந்து தமிழ்விழாக்காணும் விழைவு தழைத்து வந்திருந்தனர். தமிழ்ப் பெருமன்றத்தின் அகத்தோரும் புறத்தோரும் ஒத்த உணர்வினராய் உடங்கியைந்து விழாப்பொலிவு காணும் விருப்பமொன்றே யுடையராய் மேவியிருந்தது உள்ளுதோறும் உளளுவார் உள்ளத்து உவப்பு மிகுவித்தது. சென்ற மூன்றுநாளும் போதிய ஊணும் உறக்கமுமின்றி, தமிழ்ப் பெருமக்கட்குத் தொண்டு புரியும் நோக்கங்கொண்டுழைத்த தொண்டர்கள் மேனியிலாதல், முகத்திலாதல் தளர்ச்சி சிறிதும் மெய்ப்பட்டிலது. யாவர் யாது வேண்டினர் அவர் அதனை இனிது பெற்றனர்; எனச் சுருங்கக்கூறலாம்

தமிழ்த்தாயின் பெருமை யுரைக்கும் வாழ்த்தொலியுடன் சங்கத்தலைவர், ஏனைத் தமிழ்ச் செல்வரும், தமிழ்த்தொண்டரும் உடன் சூழ்வர, அடிகள் தங்கிய பேரகம் சென்று, அவர் திருவடி பரவி வரவேற்று அழைத்துப்போதந்தனர். அடிகள் பெருமன்றம் புகுதலும் யாண்டும் யாவர்வாயினும் தமிழ்த்தாய் வாழ்க என்னும் வாழ்த்தொலி யெழுந்து, அயர்ந்த நினைவினராய் வேறு அலுவலில் இருந்தாரையும், தன்னை நினைப்பித்துத் தமிழ்ச் சங்கத்திற் கழைத்து வந்தது. கடவுள் வணக்கமும் தமிழ்த் தெய்வப் பராவலும் சங்க மாணவச் சிறார்களால் நடைபெற்றபின், தலைவர் பணித்த வண்ணம், தோரமங்கலம், ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், "தமிழரசி குறவஞ்சி" எனத் தாம் இயற்றிய சீரிய கூரிய தீந்தமிழ்ச் சொற்களாற் றொடுக்கப்பெற்ற இன்னிசைச் செய்யுணூலை அரங்கேற்றம் செய்தனர். குறவஞ்சி நூலின் பாட்டினங்களைத் திரு. வித்துவான் பொன்னுசாமி முதலியாரவர்கள் தமது இனிய தீங்குரலெடுத்து, சந்தமுறப் பாடிவர, திரு. ஆசிரியர்அவர்கள் அப்பாக்களின் பொருணலங்களைத் தம் கண்ணினும் மொழியினும் எண்மையில் விளங்க எடுத்துக் காட்டினர். பாக்களின் சீரும் தொடையும் செந்தமிழோசையும் கேட்டார் செவிக்குத் தெவிட்டா இன்பம் பயந்தது எனக்கூறுவோமாயின், அஃது யாம் மனமகிழ்ச்சியால் வேறுசொல் காணமாட்டாது தடுமாறித் தெளிந்துகூறிய சின்மொழியென அறிஞர் கொண்டமைவர்.

இன்ப நுகர்ந்தார் அந்நுகர்ச்சிக்குரிய பொருளின் நலம் பாராட்டலுண்டன்றோ? துறைத்தீந் தமிழின் தொன்மை முடிபும் அதுதானே. திரு. ஆசிரியர் அவர்கள் தம் சொற்பெருக்கினை நிறுத்தின அளவில், இன்ப நுகரும் பேறுபெற்ற புலவர் பெருமக்கள், குறவஞ்சி நூலின் செந்தமிழ் யாப்பிற் பிணிப்புண்டு, தம்மனக் கருத்தைப் பாட்டாலும் உரையாலும் பாடியும் உரைத்தும் மகிழ்ச்சி மலிந்தனர். அவை பின்னர் வெளியிடப்பெறும்.

பின்னர், நிகழ்ச்சி நிரலிற் குறித்த வண்ணம் துடிசைகிழார் திரு. அ. சிதம்பரனார் அவர்கள் "திருக்குறள் பரிதியுரை" என்னும் பொருள்பற்றி, ஆராய்ச்சிச் சொற்பொழிவொன்றாற்றினர். திரு. பெருஞ்சொல் விளக்கனார். அ. மு. சரவணமுதலியார் அவர்கள் மிக்க இன்றியமையாததோர் அலுவல்குறித்து, அதுபோது தமது சொற்பொழிவினை ஆற்றக்கூடாராயினமையின், தலைமை அடிகளின் பெருநலம் கிளரும் முடிப்புரையுடன் முற்பகல் நிகழ்ச்சி முற்றுப்பெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 3-30 மணிக்குத் தொடங்கிற்று. காலைக் கூட்டத்தின் காட்சியினும் மாலைக் கூட்டத்தின்மாட்சி மனவெல்லையைக் கைகடந்து நின்றது. வாழ்த்தும் வணக்கமும் நிகழ்ந்தபின், "மூர்த்திநாயனார்" என்பது பொருளாகப் பெரிய புராண உரையாசிரியர், கோயமுத்தூர் திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. அவர்களும், "சேக்கிழார் உவமக்கவின்" என்பதுபொருளாக பெருஞ்சொல் விளக்கனார், திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்களும், "வல்லரசும் நல்லமைச்சும் என்பது பொருளாகச் சென்னை, திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பி. எ. பி. எல். அவர்களும் பெருந்தேன்பெய் அருமழையெனச் செந்தீந் தமிழ்ச் சொற்பொழிவாற்றினர். தலைமைப் பெருமை மிக்க நம் சைவப்பெருந் திரு. சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாச்சாரிய சுவாமிகளின் முடிப்புரையெழுந்து சிறையழி புதுப்புனலென மனக்கறையழிக்கும் சொற்பெருக்கெனப்பரவி, பெருமன்றத்தின் அகத்திருந்தோர் செவிப்புலம் புகுந்ததோடு, அருகிருந்த ஒலிபரப்புக்கருவியாகிய பேரொலி மதகுபுகுந்து புறத்திருந்தோர் செவிப்புலமெல்லாம் பாய்ந்து, அவரவர் மனவயலைத் தோய்ந்து அறிவுப்பைங்கூழ்க்கு ஆக்கம் தருவதாயிற்று. முடிவில் நம் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை எம். ஆர். எ. எஸ். அவர்கள், நன்றி

கூறும் திருப்பணி மேற்கொண்டு, நம் சங்க விழா இத்துணைப் பெருஞ் சிறப்போடு நிறைவெய்தியதற்குத் தோன்றாத்துணையாய்த் தண்ணருள் வழங்கிய இறைவன் அருட்டிருவடியை உளத்தாற் பரவி, வெள்ளிவிழாவிற்குத் தலைமைதாங்கித் தம் பேரறிவால் நெடிதாய்ந்துகண்ட செம்பொருட் சொற்பொழிவு பெய்து, நம்மனோர் உள்ளமெல்லாம் தமிழ்ப்பணியில் ஊன்றி நிற்குமாறு ஊக்கங்கொளுவிய திருப்பாதிரிப்புலியூர் சைவப் பெருந்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாருக்கும், சொற்பொழிவு நிகழ்த்திச் சிறப்பித்த தமிழ் மாண் புலமைச் சான்றோர்க்கும், விழாக்காலத்து யாண்டு நிற்பினும், தமிழ்ப்பெருமன்றத்து அகநிகழ்ச்சியனைத்தும் புறத்திருந்தார் பலர்க்கும் செவிநிரம்ப உணர்த்திய ஒலிபரப்புக்கருவிகளை உதவுமாற்றால், விழாச்சிறப்பின் செம்பாதியினைத் தமக்குரிமைசெய்துகொண்ட மேலைத் தஞ்சைமாநாட்டாண்மைக் கழகத் தலைவர் திரு. வி. நாடிமுத்துப்பிள்ளையவர்கட்கும், அவர்தம் ஆணைவழி நிற்போரும், நம் சங்கத்தொண்டருமாய், அக்கருவிகள் யாவும் செவ்வனம் தொழிற்படுமாறு பெருங் கருத்தூன்றித் துணைசெய்த திரு. டி. வி. இரத்தினம்பிள்ளையவர்களுக்கும், கல்லூரி யாசிரியர்கள் பலருக்கும், இவ்விழா நிகழ்ச்சி குறித்துச் சென்ற பல ஆண்டுகட்குமுன் வேண்டுகோள் விடுத்தது குறித்து, அருள் செய்து பொருள் உதவி செய்த பெருந்தமிழ்ச் செல்வர்கட்கும், கல்லூரிச் சிறார்கட்கும், விழாக்காலத்துத் தம் வருகையால் பெருஞ்சிறப்புப் பயப்பித்ததோடு, பெருநன்கொடை புரிந்து சங்கத்தின் தமிழ்த் தொண்டிற்குப் பேராதரவு பண்ணிய பெருமக்கட்கும், தமிழ்நாட்டுப்பேரவைப் பெரியோர்கட்கும் சங்கத்தின் உளங்கெழுமிய பெருநன்றி கூறினர். பின்னர், இரவு 9 மணிக்குச் சங்கமாணவர் நடித்த "கரிகாலன்" என்னும் நாடகக்காட்சியால் தமிழ்நலத்தின் பெருமாண்பில் இறும்பூது கொண்டிருந்த பேரவைப் பெருமக்கள் முன்னர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் சங்கச் சிறார்களின் நடிப்புத்திறனை வியந்து பாராட்டி வாழ்த்துக் கூறினாராக, நம் சங்கம் மீட்டும் நன்றி செலுத்தித் தமிழ்த் தாயை வணங்கி அவள் திருத்தொண்டில் அமைவதாயிற்று.

நலம்.

சிவமயம்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவின் தலைவர், திருப்பாதிரிப்புலியூர், சைவத்திரு,

## சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாச்சாரிய சுவாமிகளது

# தலைமைப் பேருரை*

மெய்யன்பர்களே!

முருகப்பிரான் திருவருட்டுணையானே நடைபெறும் இக் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழாவில் தலைமையைத் தாங்க அடியேற்குத் தந்த சங்கத் தன்பர்களிடத்தென்றும் மறவா அன்புடையோம். முகவுரையில் தமிழைப்பற்றிச் சில சொல்ல எண்ணுகின்றோம்.

உலகில் மக்களாகப்பிறந்தார் யாவரும் அடையவிரும்பும் அல்லல் நீத்தவுவகை கல்விப்பயனாகிய அறிவுடைமையானும் தோன்றும். (தொல்-பொருள், மெய்ப்பாட்டியல் 11 சூ.) தமிழைக்கற்று அறிவடைதலால் பேருவகைதோன்றும். 'தமிழ்சொலும்.........தாணிழற்சேர அம்மலர்க்கொன்றை யணிந்த எம்மடிகள்' (சம்பந்தர் தேவாரம்-அச்சிறுபாக்கம்)

### தமிழ் தெய்வமே

தமிழ் தெய்வமா? ஒரு மொழியா? என்பதே யாம் பேசவிழைந்ததாகும். உலகில் எத்தனையோ மொழிகளிருப்பினும் அவையெல்லாம் மொழியென்றமட்டில் போற்றப் பெறுகின்றனவேயொழிய அம்மொழிகளிலெவற்றையேனும் தெய்வமாக வழிபட்டதாக அடியேனுக்கு எட்டவில்லை. தமிழைமட்டுமே நம்முன்னோர் தெய்வமெனப் போற்றிவந்திருக்கிறார்கள். 1 'தமிழோடிசையானவன்' (அப்பர் கடம்பந்துறை 3) 2 'முத்தமிழும்.......ஆனான்கண்டாய்' (அப்பர் திருமறைக்காடு 9) இவ்வாறு போற்றியது தங்கள் மொழியென்னும் அபிமானத்தாலல்ல. மேற்காட்டிய தொடர்களால் நாவுக்கரசர் உண்மையாகவே கடவுள் தமிழாக ஆயினான் என்று போற்றிக் கூறியுள்ளார். கடவுள் ஒன்றோடும் சேராத காலம் சிறப்புநிலை. மற்றொன்றோடு சேர்ந்தகாலம் பொது

---

* இது விழாவிற்கு வந்திருந்த ஓர் அன்பரால் சுருக்கி யெழுதப் பட்டது.

நிலை. கடவுளின் தனித்த பேரின்ப வடிவமே சிறப்புநிலை. பொதுநிலையில் திருமறைக்காட்டில் எழுந்தருளியுள்ள பெருமானை நாவரசர் 'முத்தமிழும் ஆனான்கண்டாய்' என்று போற்றியிருக்கின்றார். இறைவன் இதுகாறும் சிறப்புநிலையிலிருந்து இதுபோது பொதுநிலையில் முத்தமிழ்மட்டுமே ஆகிவிட்டான் என்பதனை இத்தொடராற் குறிப்பிட்டருளினார். 3 'தமிழ்த்தெய்வத்தையுண்ணினைந்தேத்தல் செய்வாம்' (சீகாளத்திபுராணம்) என்று கூறிப்போற்றிய மூந்நூறாண்டுகட்கு முற்பட்டவரான கருணைப்பிரகாசர் அருள்வாக்கையும் ஒன்றுபடுத்தி நினைந்து தமிழ் தெய்வமே என்பதனை ஞாபகப் படுத்துகிறேன். தமிழின் பெருமையைப் பேசவோ ஆராயவோ முடியாது. அறியாதவர்தான் இதுதானேதமிழ் என எளிதிற் கூறுவர். 'புகலரியதானதமிழ்' என்றார் அருணகிரியார். பிறர் அறிந்த அளவிலேயே நம் செந்தமிழ்ப் பெருமை அடங்கிவிடாதென்னும் உண்மையினைக் குமர குருபர அடிகளார் 'இக்கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்' என்றதொடரால் விளக்கியுரைத்துள்ளார்.

### தமிழென்பதின் பொருள்

தமிழென்ற இச்சொல் வெவ்வேறு மொழிகளிலிருந்து வந்ததெனக் கூறுவார் சிலர். பலமொழிகளினுஞ் சிறந்த ஒருமொழியைக்குறிக்க அதன்கண் ஒரு சொல்லில்லாமலா போய்விட்டது? தமிழ் என்னும் இச்சொல் தமிழ்மொழியே; வேற்றுமொழியினின்றும் வந்ததொன் றன்றென்பதே உறுதி. தமிழ் என்னுஞ்சொல்லிற்கு இனிமையென்பதுபொருளாகும்.

1 தமிழ் தழீஇய சாயலவர் (சிந்தாமணி, சுரமஞ்சரி 32)
2 இன்றமி ழியற்கை யின்பம் ( ௸ 69)
3 தமிழ்நிலை பெற்றதாங் கருமரபின்
மகிழ்நனை மறுகு (சிறுபாண்-66, 67 அடி)

4 உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் தீந்தமிழ் (திருக்கோவை) எனவரும் அருஞ்சொற் றொடர்களால் இனிது புலனாம். மேற் காட்டியவற்றால் தமிழென்பதன்பொருள் இனிமையென்பதும் இயற்கையான இன்பமும் இணையிலாப் பெருமையுமுடையது தமிழென்பதும் புலப்படுவதுடன் 'சிறைவான் புனற்றில்லை' என்ற திருக்கோவையாரில் கற்றறிபாங்கன் தலைவனைநோக்கி 'இறைவா! நின் தோள்கள் இளைத்துள்ளனவே. தில்லைச்

சிற்றம்பலமாகிய நல்லஇடத்தும் என்னெஞ்சமாகிய தீய இடத்தும் ஒப்பத்தங்கும் சிவபிரானது உயர்ந்த மதிலையுடைய கூடலின்கண் ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின்றுறைகளிடத்து நுழைந்தாயோ? அன்றி ஏழிசையினது சூழலின்கட்புகுதலானோ? மலைபோன்ற நின்தோள்கள் இவ்வாறு மெலிவதற்குரிய காரணமென்னை' என வினவு முகத்தான் பரனாகிய சிவபெருமானுர் ஆராய்ந்தும் முடியாத பான்மையும் இனிமையும் உடையது தமிழ்மொழி என்பதனை அறிவினாற் சிவனேயாய வாதவூரடிகள் எடுத்துரைத் தருளினார். கடலைக்கூட அளந்துவிட்டனர். ஆனால் இத்தமிழ்மொழியின் ஆழமும் அகலமும் அறிய முடியவில்லையாகலின் இதனைத் 'தமிழெனுமளப்பருஞ்சலதி' எனக் கல்வியிற் பெரியவரான கம்பர் குறிப்பிட்டுப் புகழ்ந்தார். இவ்வினிய தமிழ்மொழியை வடமொழியாளர் திராவிடம் என்ற பெயரால் அழைக்கின்றனர். த்ரு—ஓடுவது. இது பிறவினையாய் நின்று ஓட்டுவது என்ற பொருளைத் தர வல்லதாகும். எனவே தமிழ்மொழியானது வினைகளை ஓட்டி இன்பத்தை யூட்டலின் இத்திராவிடம் என்னும் பெயருக்குரியதாயிற்று. இவ்வுண்மையினைத் திராவிடமாபாடியகர்த்தரான சிவஞான சுவாமிகள் 'எவ்வினையுமோட்டுதலால் திராவிட மேன்றியல்பாடை' என்ற அடியால் விளங்க விரித்துரைத்தார்.

III தமிழ் அகரத்தை முதலாகவும் னகரத்தை இறுதியாகவுமுடைய எழுத்துக்களையுடையது.

1 'அகர முதல் னகர விறுவாய்' (தொல்காப்பியம் சூ 1)
2 'அகரமுதல எழுத்தெல்லாம்' (குறள் 1)
3 'கூடிமுயங்கப் பெறின்' (குறள் 330)

திருக்குறள் அகரத்தை முதலெழுத்தாகவும் னகரத்தை இறுதியெழுத்தாகவுங்கொண்டு மிளிர்கின்றது.

தமிழ் அன்பின்மேலுள்ளது

உலகிற் சிறந்தது அன்பே. அன்பினிற் சிறந்ததொன்றில்லை. இவ்வன்பை விளைப்பதேயன்றி அன்பு மயமாகவே இருப்பது தமிழாம். இறையனாரகப் பொருளின் முதற் சூத்திரத்தின் முதற்சொல் அன்பு என்பது. அதன் கடைசிச் சூத்திரத்தின் கடைசிச்சொல் மேன என்பதாம். இவ்விரண்டையுஞ் சேர்த்தால் அன்பின் மேன என்று முடிதல்

கொண்டு நூல் முழுதுமே அன்பின் மயமானது என்ற வுண்மையை யறியலாம். ஆதலால் தமிழ் அன்புமயம் என் பதில் ஐயமில்லை.

தமிழ்மொழிப் பண்பு

1 செம்மை—'செல்வன் ஞானசம்பந்தன் செந்தமிழ்'
(சம்பந்தர்-பராய்த்துறை 11)

2 இனிமை—'இன்தமிழ்மாலை' (பெரியாழ்வார் 3—2—10)

3 கோதின்மை—'கோதில் தமிழ்த்தொடை புனைந்து'
(பெரியபுராணம் அப்பர் 249)

4 பெருமை—'பெரியதமிழேபாடி' (திருப்புகழ் 146)

5 நெடுமை—'மல்லல்நெடுந்தமிழாலிம்மாநிலத்தோர்க்குரை சிறப்ப' (பெரியபுராணம் சம்பந்தர் 75)

6 தண்மை—'தண்டமிழ் மலர்பத்தும்'
(சுந்தரர் ஆவடுதுறை 10)

7 நறுமை—'நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்'
(நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப்பாயிரம்)

8 நன்மை—'நற்றமிழ்வரைப் பினிங்கு' (பெரிய.
[நாட்டுச்சிறப்பு 35)

மேலும் 'வினையுடையருந்தமிழ்' (சம்பந்தர் ஆவடுதுறை 11) எனவும் 'இன்புறுந்தமிழ்' (சம்பந்தர்-விளநகர் 11) எனவும் 'சீர்மலிசெந்தமிழ்' (பெரியாழ்வார் திருமொழி உ-ப, 4தி 10) எனவும் 'புகலரியதானதமிழ்' (திருப்புகழ் 401) எனவும் 'பல்குதமிழ்' (ஷை 389) எனவும் தமிழின் பண்பு பாராட்டப் பெற்றிருக்கின்றது.

சாப அனுக்கிரகச் சத்தியுடையது தமிழ்

"முரணில் பொதியின்முதற் புத்தேள் வாழி
பரணகபிலரும் வாழி—யரணிய
லானந்த வேட்கையான் வேட்கோக்குயக்கோட
னானந்தஞ் சேர்கசுவா"

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட்பட்டானைச்—சீரிய
வந்தண் பொதியிலகத்தியனாராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா" (தொல்பொருள் செய்யுள்
பேராசிரியர் உரை மேற்கோள்)

என நக்கீரர் என்னும் புலவர் ஒருவன் சாவவும் வாழவும் பாடிய தமிழ்மந்திரமாகிய அங்கதப்பாட்டால் இவ்வுண்மை நன்கு தெளியப்பெறும்.

தமிழ் இன்னிசைப் பகுதி மிகவுடையது

ஏழிசைத்திறங்களும் அளவற்ற கீதங்களும் நிரம்பப் பெற்றது தமிழாம். இவ்வுண்மை

1 செந்தமிழ்க் கீதமும் (ஞானசம்பந்தர் மழபாடி ௩)

2 அளப்பிலகீதஞ் சொன்னார்க்கடிகள் தாம் அருளுமாறே (அப்பர் ௬-ந்திருமுறை)

3 ஏழிசைத் தமிழ்ஞான சம்பந்தன் (காஞ்சிப்புராணம்)

என்ற தொடர்களால் அறிவுறுத்தப்பட்டது

தமிழ் பரமசிவன் தந்தது

தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான் (இராமாயணம் ஆரணி அகத்தி 41)

திருமால்போன்றுலகமுற்றும் பரவும் நிலையது தமிழ்

நீண்டதமிழா லுலகை நேமியினளந்தான் (ஷ ஷ 36)

X ஆரியமறிந்த பிரகத்தன் குறிஞ்சிப் பாட்டைக்கேட்டு வியந்தாற்போன்று பிறமொழியாளர் வியக்க நூல் பலவுடையது தமிழ்மொழி.

XI இருபாலிலும் எண்ணிறந்த புலவர்களையுடையது.

XII பலவகைய நூல் பலவுடையது.

XIII 1 சிவபெருமான் திருவாய் மலர்ந்த இறையனு ரகப்பொருளையும் மதிமலி புரிசை முதலியசெய்யுளையும் உவந்த பல நூலையுமுடையது. 2 முருகப்பிரான் பாடிய செய்யுளையும் உவந்த பல நூலையுமுடையது. 3 விநாயகரும் அம்பிகையும் உவந்த பல நூலையுமுடையது. திருமால் தேடிச் செல்ல முன்சென்ற நூலையுடையது.

இத்தகைய பெருமையும் இனிமையுமுடைய தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற நிலையில் அரசியலார் போற்று திருப்பது கவலத் தக்கதாகும். அரசியலதிகாரியொருவர் பேசுகையில் "பேசப்படாது இறந்து போனமொழியே உயர் தனிச் செம்மொழி என அழைக்கப்படும்" என்று குறிப்பிட்டாராம். அது கிடக்க, நம் தமிழ்மக்கள் அன்பும் தெய்வத் தன்மையும் கூடிய இத்தகைய தமிழைப் புறக்கணித்துப் பிற

மொழி பயிலுதலை மேற்கொண்டாரென்றால் அத்தகையசெயல் அவர் தம் ஒருசாண் வயிற்றை வளர்ப்பதற்காக அல்லவோ? இனியாவது தமிழர் தம் தமிழ் நூல்களைப்படித்து அவற்றுள் இறந்தனபோக இருந்தனகொண்டு நம்நாகரிகம் ஆராய வேண்டும். முற்காலத்தில் தமிழை ஆணொடு பெண்ணும் பயின்றுவந்தனர். ஆயிரம் ஆண்டுகட்குமுன் 'பெருந்தடங் கட் பிறைநுதலார்க்கெலாம், பொருந்துகல்வியுஞ் செல்வமும் பூத்தலால்' என்று கூறப்பட்டிருத்தலால் ஆணுக்கேற்றது ஈது பெண்ணுக்கேற்றது ஈது எனப்பிரித்து அவரவர்க் கேற்ற கல்வி புகட்டவேண்டும். சங்ககாலத்தமிழ்ப்புலவர் களில் பெண்டிர்பலரும் இடம்பெற்றுள்ளார்கள். முற்காலத் துப் புலவரெல்லாம் இயற்கை நவிற்சியையே மேற்கொண் டிருந்தார்கள். இக்காலத்தெல்லாம் புனைந்துரையாக இருக் கின்றது. ஒவ்வொருநாடும் அறிவிற்சிறந்த புலவர்களைப் போற்றுதல் வேண்டும். சுந்தரமூர்த்திசுவாமிகளும் 'மட னறுபுலமையோரை மனத்துயாம் நினைத்துமன்றே' என்று போற்றிக்கூறியிருக்கின்றார். தமிழ்ப்புலவர்களை யாதரிப் பது தமிழை யாதரிப்பதாகும். ஆலஞ்சேரி மயிந்தனென் பான் 'தன்குறை சொல்லான் பிறர் பழியுரையான், மறந்தும் பொய்யான், வாய்மையிற்குறையா'னாகி வேற்றுநாட்டுப் புல வரை ஆதரித்தானென்றறிகிறோம். எனவே தமிழ்ப்புலவர் களைப் போற்றுதல் இன்றியமையாததொன்றாம். நூலாசிரியர் போதகாசிரியர் உரையாசிரியர் ஆகிய தமிழாசிரியர்களைப் போற்றுதலும் அறிவியல் நூல்களைத் தமிழில் ஆக்குதலும் பல சங்கங்களால் தமிழைப் பரப்புதலும் தமிழ்வளர்ச்சி குறித்துத்தமிழர் செய்யவேண்டிய தொண்டுகளாம். இவற்றாலேயே தமிழை வளர்த்தல் கூடும்.

இம்முறையில் இன்னபலபெருமைவாய்ந்த தமிழ்மொழி யை இக்கரந்தைத் தமிழ்ச்சங்கம் நன்றுவளர்த்து வருவது பலரும் அறிந்ததொன்றாம். இச்சங்கத்தை வளர்ப்பதன் மூலம் தமிழை வளர்த்துவரும் சீரியோர் அன்பர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையாவார். இவர் கருத்துக் கிணங்க உடனிருந்து தமிழை வளர்த்துவரும் அன்பர்கள் திருவாளர் நீ. கந்தசாமிபிள்ளையவர்கள் முதலியோர். இப் பெருந்தகையாரும் இச்சங்கமும் முருகப்பிரான் திருவருளால் மேன்மேலும் நலம் பெறுக.

வாழ்க. வாழ்க. வாழ்க.

# கரந்தைக் கட்டுரை.

நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாக் குறித்துச் சென்ற 1936-ஆம் யாண்டில், நம் சங்கம் விடுத்த விண்ணப்பத்தில், இக்கட்டுரை வெளியீடு அடிகோலப் பெற்றிருப்பது அறிஞர் அறிந்த செய்தியாகும்.

"கரந்தைக்கட்டுரை:—வெள்ளிவிழா, பொன்விழா முதலியவற்றின் அறிகுறியாகக் கட்டுரை வெளியிடும் வழக்கத்தை ஒட்டி நாமும் நம் விழாவின் அறிகுறியாகத் தமிழ் நாட்டுப் பேரறிஞர் பலரைக்கொண்டும் அறிவுத்துறை பலவற்றினும் சிறந்த கட்டுரைகளை யெழுதி வெளியிட எண்ணியுள்ளேம். இக்கட்டுரைகள் ஒருகாலத்திற்கோ, ஓரிடத்திற்கோமட்டும் பயன்படுவதாக இல்லாமல், தமிழ் இலக்கியத் தொகுதியுள்ளேயே ஓரிடம் பெறும் சிறப்புடையதாகவும், எல்லோரும் நிதியெனப் போற்றிப் பெறத்தக்க பொருள் பொதிந்ததாகவும் வெளிப்படுத்த எண்ணியுள்ளோம்" என்பது.

இத்தகைய முன்னேக்கும் பயனுடைக்கருத்தும் அடிப்படையாகக் கொண்டெழுந்த இக்கட்டுரைநூல் வெள்ளிவிழாவின் முதனாள் விழாவில் வெளியிடப்பெற்றது. இதன்கண், "நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்" என்ற கட்டுரை, பெயரளவே கண்டுசெல்வார்க்குச் சங்கவறிக்கை போலத் தோன்றுமாயினும், ஊன்றிப்படிப்போர்க்கு அஃதோர் தமிழ் வளர்ச்சிக்கட்டுரையாதல் இனிது தோன்றும். அதுமுதலாக, "தமிழின் தொன்மை" ஈறாக முப்பத்தொரு கட்டுரைகளை நம் கரந்தைக் கட்டுரை வழங்கியுள்ளது. பிற்சேர்க்கையாக அமைந்த தீஞ்சுவைச் செந்தமிழ்க்கவிகள், சங்க ஆண்டு விழாத் தலைவர்களுக்களித்த வரவேற்புப்பா, சங்கத்தின் நெருங்கிய தொடர்புடைய பெருமக்களைப் பாராட்டுப்பா முதலியனவாகும். கட்டுரையின் முகப்பில், சங்கத்தை நிறுவிய பெரியார் முதல் சங்கத்தொண்டர், அமைச்சர், கொடைவள்ளல்கள் முதலியோரை யுள்ளிட்ட பல தமிழ நன்மக்களின் உயிரோவியங்கள் வயங்குகின்றன.

நம் சங்கம் தமிழ்வளர்ச்சியையும், தமிழ நன்மக்களின் கலைவளர்ச்சியும் குறித்துப் பெருந்தொண்டாற்றும் பேரவை



இராவ் சாகேப். திருவாளர். L. N. பரமசிவம்பிள்ளை அவர்கள்
திருத்தவத்துறை (லால்குடி.)
கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழாவில் ரூபா ஆயிரம்
நன்கொடை வழங்கியவர்.

யாகலின், அக்குறிக்கோளுக்கேற்ப, இக்கட்டுரைகளும், தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம், கலை, வாணிபம், தமிழ்நாட்டுவரலாறு, மொழியியல், புலவர்வரலாறு முதலிய பலபொருள்களைப்பற்றி, நம்மனோர் கண்டறியாத பல நுண் பொருள்களை உணர்த்துகின்றன. தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு, எச்சம் இறைச்சிப்பொருள் என்ற இவை தமிழி லக்கண நுண்பொருளும், திருக்குறள் மாண்பு, குறுந் தொகை, மணிமேகலை, திருவிருத்தம் என்ற இவை இலக்கிய நுண்பொருளும், மாந்தையும் மரந்தையும், பெண்மைநலமும் புலமையறமும், குற்றாலத்தமிழ், வீரமாமுனிவர்நாடு பொழு தும் போதும், கம்பர், முதலியன அவ்விலக்கிய வாராய்ச்சி யும், சமணமுனிவரின் தமிழ்த்தொண்டு, தேவாரவாசிரியர்கள் மேற்கொண்டொழுகிய சமயக்கொள்கை, நம்மாழ்வார்காலம், அடங்கன்முறையாராய்ச்சி என்பன சமய நூலாராய்ச்சியும், ஞானத்தின் திருவுருவென்பது சமய விலக்கிய கவி நுட்ப மாண்பொருளாராய்ச்சியும், திராவிடக் குழுமொழிகள், தமிழின் தொன்மை என்பவை மொழியாராய்ச்சியும், கர் ஞடக சங்கீதம் என்பது இசைப்பொருணலமும், கந்தகமும் கந்தைகளும் என்பது மொழிபெயர்ப்பு இயற்கைப்பொரு ளமைதிகளும், வித்துவான் தியாகராசசெட்டியார், வித்து வான் அழகிய சொக்கநாதபிள்ளை என்பன தமிழ்ப்புலவர் வரலாறும், பிற்காலச் சோழரும் அவர்காலத்துப்புலவரும், நரலோகவீரன், சோழபாண்டிய மன்னர்கள் காலத்தில் வழக் கத்திலிருந்தநிலவரியும் நிலவுரிமைமாற்றுதலும்,தென்னிந்திய வாணிகம், கலியாணிச் சளுக்கியர்கள் முதலியன சிலாசாசன ஆராய்ச்சி நலங்களும் பிறவும் கூறுகின்றன. தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கமாகும் உறுப்புக்கள் பலவற்றையும் குறித்து இனியகட்டுரைகள் நிரம்பப்பெற்றிருத்தலின், இதன் வெளி யீடு தமிழ்நாட்டவர்க்குப் பெருவிருப்பும், பெருமதிப்பும், பேருக்கமும் நல்கும் பெருவிருந்து என்பதனை யுணரமாட்டா தார் பேதையரேயாவர்.

இனி, இக்கட்டுரைகளை வழங்கிய பெருமக்கள் பலரும் தமிழ் மாண்புலமை மிக்க சான்றோர்கள் என்பது தமிழ்நாடு நன்கு அறிந்தது. வடமொழியும் தமிழ்மொழியும் ஒருமை யின் உணர்ந்து புலமைப் பெருமை சிறக்கும் பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களை யறியாதார் யாவர்?

''வடமொழியாம் பேராரவாரநீர் மகிழ்ந்தாடி வருவான்புக்குத்
திடமகலத் தளர்ந்தாழ்ந்த சிலர்மயங்கித் தமிழ்த்தாய்க்குச்
சிறுமைசொற்றூர்,
அடகெடுக அவர்செயலென் அறிஞன் இவன் செயல்பார்!
என்றறிஞர்கூற,
வடமொழியை எதிர்நீந்தி வந்துதமிழ் அணியுணர்த்தும்
மாண்பன் நீயே''

என நம் கவியரசர் பாடியது நம் பண்டிதமணியையன்றோ! ''பவங்காணுப் பார்மன்னர் பாற்கரன் முன்னுள பல்லோர்'' சீரை, ''எவ்வுலகும் எய்துவிப்போன் இராகவன்'' எனப் பரந்த புலமை சிறந்த மகாவித்துவான். திரு. ரா. இராகவையங்கார் அவர்களையும், ''படியுரைக்கும் படியில்லாப் பாவலன்பாற் பயின்றகோ''வாகிய மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி. டாக்டர். திரு. உ. வே. சாமிநாதையர் அவர்களையும்,

'' பெருக்கமுறு நூலியற்றப் பிறங்குமுரை
நடையெழுதப் பேச்சுவன்மை
சிறக்கும் விரிவுரையியற்றச் செழுநூல்கட்
குரைவிரிக்கத் திகழாராய்ச்சி
தருக்கநூல் இவைகாணத் தாம்தாம்தாம்
எனமுழக்கும் தகவினேரும்
செருக்ககல அவையியற்றும் திண்ணியவேங்
கடசாமிச் செம்மால் வாழி''

எனச் செந்தமிழ் மக்களுட் சீரியோர் பரவும் பண்டித. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களையும் யாவர் அறியாதார்? பன்னலங்கெழுமிய சொன்னலம் கனியச் சொற்பொழிவாற் றும் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளையவர்களையும், மொழி பெயர்ப் பரிது எனமூங்கைபோல் இருக்கும்ஆங்கிலவறிஞரும், வேற்று மொழி விரவித் தம் வெள்ளறிவு விரிக்கும் பிற தமிழ் மொழி பெயர்ப்பாளரும் நாணித் தலை குனிப்பிக்கும் மொழிபெயர்ப் புத்தகவுடைய திரு. அ. ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்களையும், நுண் மாண் நுழைபுலனும் பேராய்ச்சிப் பெருந்தகவும், எப்பொரு ளும், எம்மொழியும், எச்செயலும் எவையும் உண்மை நலமுடையவாம் என நுணுகி யாராயும் ஆசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களையும், தமிழ் நாடெங்கும் பண்டைத் தமிழ் வாழ்வின் பெருநிலைத் தனிச் சிறப்பைக் கற்றூரும் கல்லாரும் ஒப்பவுரைத்துத் தமிழ்நாட்டவரை

உண்மைத் தமிழ்ப்பெருமக்களாக்கித் தமிழவீரம் தழைப்பிக்கும் சொற்பொழிவு நிகழ்த்தி வீரம் கொளுத்திவரும் திரு. S. சோமசுந்தரபாரதியவர்களையும் அறியாதார் பலவறிந்தும் அறியாதாரே. இலக்கணவிலக்கியப்பேரறிவுபடைத்த தமிழ்ப் பெரும்புலவர் திரு. ம. நா. சோமசுந்தரம்பிள்ளையவர்களையும் சைவ நலம் மிகச்சிறந்த திரு. C. K. சுப்பிரமணியமுதலியார் அவர்களையும், அருந்தமிழ்விநோதராய், பல அரிய நூல்களைத் தமிழில் ஆக்கித் தமிழ்த்தொண்டாற்றிவரும் திரு. வெ. ப. சுப்பிரமணியமுதலியரர் அவர்களையும், இசைத்தமிழ்ச்செல்வர் திரு. தி. இலக்குமணப்பிள்ளையவர்களையும் யாம் ஈண்டுக் கூறிப் பாராட்டுவது வேண்டா கூறலாகும். இவ்வண்ணமே, கட்டுரை வழங்கிய ஏனைத்தமிழ்ப் பெருமக்களின் தமிழ்மாண்புலமையினை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி, அவர்வழங்கிய கட்டுரைகளைப் படித்து இன்புறுவதே அறிஞர் செய்யவேண்டுவதெனச் சுருங்கக்கூறலாம்.

இனி, இக்கட்டுரையைப் பார்த்துத் தம் மதிப்புரை வழங்கிய பெருமக்களுள், தகவிலார் சிலர் தம் தகவின்மை நினையாது பலபொய்யுரை கூறியிருக்கின்றனர். அவர் கூறியவை வருமாறு :—(*Vide* Hindu 22nd May 1938)

1. கரந்தைக்கட்டுரை என்பதற்கு தமிழின் ஆக்கம் (Making of Tamil) எனப் பொருள்கொண்டது.

கரந்தைக்கட்டுரை யென்பதற்குரிய பொருள்தானும் அறியமாட்டாத இம்மதிப்புரைகாரர், இதற்கு மதிப்பு வரைகின்றேன் என முற்போந்தது, “நான்வலன் என்பான் தமிழ் நாற்றமும் வீச கில்லான்” எனக் குலாம் காதிறுநாவலர் அவர்கள் கூறியதற்குப்போதிய எடுத்துக்காட்டாகிறது. இளையரும் எளிதிற் பொருள்கொள்ளும் இதற்குப் பொருள்கூறி இடம்நிரப்புதல் வேண்டாவெனவிடுக்கின்றாம்.

2. சென்ற இருபத்தைந்தாண்டுகளாக இச்சங்கம் நிலைத்த தமிழ்ப்பணி செய்ததில்லையென்பது.

இக்கட்டுரை நூலுக்கு மதிப்புக்கூறப் புகுந்த ஒருவர், சங்கத்தின் வரலாற்றிற் பிழைகாணப்புகுவதும், இயைபில்லன கூறுவதும் மதியின்மையாகும். வடமொழியின் வழித்தோன்றலே தமிழ்மொழியென்ற கொள்கையும், தக்க தமிழ்ச்சொல் இருப்பினும், அதனை விடுத்து வடசொற்களை வழங்குவதே

நலம் எனக்கருதியிருந்த மூடநம்பிக்கையும், வடமொழிப் புலவரோடு தமிழ்ப்புலவர் ஒப்பாகார் எனக்கொண்டிருந்த அழுக்காறும், தமிழர் ஏனையோரினும், மொழியாலும் தாழ்ந்தவர் என்றிருந்த பொய்ந்நினைவும், மகா-ள-ள-ஸ்ரீ, ஸ்ரீமான், என்பன முதலிய வேற்றுமொழிப் பொருளில் பெயர்களை வழங்குவது சிறப்பென நினைந்து வழங்கிப்போந்த புன்மை வழக்கினையும் இவைபோல்வன பிற அழிவழக்கு களைப் போக்கியது கரந்தைத் தமிழ்ச் சங்கமே. வடசொல் விரவுதலின்றித் தனித்தமிழிலேயே ஒருவன் தன்கருத்துக்களை இனிது வெளியிடுதல் கூடும் என்பதனையும், தமிழனுக்கு உரியது தமிழ்மொழியே என்பதனையும், தமிழ்வளர்ச்சியே தமிழன் முன்னேற்றத்துக்கு நெறியாம் என்பதனையும் எடுத்துக்காட்டியது இச்சங்கமன்றி வேறில்லையன்றோ? தமிழறிஞர்க்குத்தக்க சிறப்பும், தகுதியும் அரசியலார் வழங்குமாறு பேருழைப்புப் புரிந்ததும், தமிழ்க்குத் தனித்த சிறப்பிடம் அமையுமாறு முயன்றதும் இத்தமிழ்ச் சங்கம் என்பதனை அறியாதவர் அறிவுடையராவரோ? தொல்காப்பியத் தெய்வச்சிலையார் உரை, நக்கீரர், கபிலர் முதலிய ஆராய்ச்சி நூல், முதலிய தமிழ் நூல்களும் தமிழ்ப்பொழில் வெளியீடும் தமிழ்ப்பணியல்லவென யாவரேனும் கூறுவரோ? சங்கத்தின் சிறப்பு மிகுவதுகண்டு பொறாமையால் கண்ணொளி மழுங்கிக் கசடுமிக்கவரன்றோ இவை தமிழ்ப்பணி ஆகா எனக் கருதற்பாலர்.

3. திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்த ஓர் ஆண்டுவிழாவில் திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் பெருமுழக்கிட்டுச் சொற்பொழிவு செய்தபோது, தஞ்சை. திரு K. S. சீனிவாசப்பிள்ளையவர்கள் ரோஸ் என்பதற்குத் தமிழ்ச் சொல் யாது என வினவினர் என்றும், அதற்கு ஆங்கிருந்தோர் வாய்வாளாதிருந்தார் என்றும் பொய் கூறியது.

இவ்வாறு பொய் கூறும் திறம் இம்மதிப்புரைகாரராகிய (Va-ra) என்பார்க் கொழியப் பிறர்க்கு ஒல்லாது. இது போலும் நிகழ்ச்சி சங்க ஆண்டுவிழாவில் நிகழ்ந்ததே கிடையாது. திரு. சீனிவாசப் பிள்ளையவர்கள் இதுபோது உயிரோடிராமையால், தாம் எத்துணைப்பொய்யும் படைத்துமொழியும் சமைத்துக்கூறலாம் என்று கருதிவிட்டாராயின், இவர் தம் பொய்வன்மைக்கு யாம் இரங்குவதல்லது பிறிதொன்றும்

சொல்லேம். பல நூற்றாண்டுகளாகத் தமிழின் தனிச் சிறப்பைத் தலையெடுக்கா வண்ணம் தகாதன கூறியும் செய்தும் போந்த தகவிலார் கூட்டத்தின் செய்கை, இம்மதிப்புரைகாரர் பாலும் சிறிது முளைத்திருப்பதாகத் தோன்கிறது. தமிழர் தம் தமிழின் தனிச் சிறப்பை யுணர்ந்து கொண்டனராகலின், இவர் தம் பொறாமை இவர் தம் மனப்புன்மையைக் காட்டுவ தல்லது தமிழ் வளர்ச்சியைத் தடாது என இம்மதிப்புரை காரர் இனியாகிலும் எண்ணியமைவாராக.

4. வக்கீல் என்பதனை வழக்கறிஞர் என்றும், கோர்ட் என்பதனை நீதிமன்றம் என்றும் செந்தமிழால் வழங்குவது குறித்து இம்மதிப்புரைகாரர் வயிறெரிந்து பொறாமை மிகுந்து புலம்புகின்றார்.

அடிமை வாழ்வும், அடிமை யுணர்வும் அறக்கெடவேண்டும் என்றஎண்ணம் மிக்கு நிலவும் இக்காலத்து, தக்க தமிழ்ச் சொல்லிருப்பவும் அதனை வழங்காது, ஏனைமொழிச் சொற்களுக்கே அடிமையாக வாழவேண்டும் என்று கருதுவது அடிமை யுணர்வே யூறிய அடிமை மாக்கட்கு அமையுமே தவிர, ஆண்மையும் உரிமையும் நிலைபெறவுடைய தமிழர்க்கு ஆகாமையின், இம்மதிப்புரைகாரர் மதிப்புரை மதியுடையோர் கண்டு நகையாடற்குரியதாகும்.

5. தமிழின் தொன்மை முதலிய கட்டுரைகள் கையறு நிலைச்சொற்பொழிவுகளே (Funeral orations) எனப்பழித்தல்.

ஒருகட்டுரை நூற்கு மதிப்பெழுதுவோர், கட்டுரைப் பொருள், தெரித்தமுறை, உரைநயம் முதலியவியல்புகளை ஆராய்ந்து கூறுவது மரபு. இம்மதிப்புரைகாரர்க்கு இச் சிறு முறையும் தெரிந்திலது. பொறுப்புடைய பத்திரிகாசிரியர்கள் அறிவுடையோரைவிடுத்து தம்மை மதித்துப் போந்த நூல்கட்கு மதிப்புரை எழுதுவித்தல் மாண்பே தவிர, இவ்வாறு கையறியாதாரை மதிப்பெழுதவிடுவது சிறப்பன்று. மோஹஞ்சோடேரோ முதலிய இடங்களிற் கிடைத்துள்ள புதுக்குறிப்புக்களையும், அவற்றையடிப்படையாகக் கொண்டெழுந்த ஆராய்ச்சி யுரைகளையும் நன்கு ஆராய்ந்து தெளிக்கும் நெறியால் தமிழின் தொன்மை ஓங்கிமிளிர்வதுகண்ட, தமிழ்ப்பற்றில்லாத் தமிழ்நாட்டுப் பேய்கள் சிலவற்றிற்குப்

பொருமைக்காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. அக்காய்ச்சல் வாய்ப்பட்ட இம்மதிப்புரைகாரர், இக்கட்டுரையினையும் பிற வற்றையும் கண்டு அறிவுபுலர்ந்து இவ்வாறு பிதற்றுகின்றார்.

ஞானத்தின் திருவுரு, தென்னிந்திய வணிகம், கலியாணிச் சளுக்கியர்கள், முதலாகவுள்ள கட்டுரைகள், ஏன், ஒவ்வொரு கட்டுரையும் எழுத்தெண்ணி ஊன்றிப் படிக்கத் தகுந்ததாகும். முடிவாக, மிக்க நுண்பொருளும், தெளிந்த சொன்னடையும், அழகிய கருத்துவெளியீடும், காரணகாரிய இயைபுகளும் பிறவும் மல்கி நல்லறிஞர் மனத்தில் பேரின்பம் நயப்பிக்கும் இக்கட்டுரையினை ஒவ்வோரு தமிழனும் வாங்கிப் படித்துத் தமிழ் நன் மகனுதல் வேண்டும் என்று தமிழ் நாட்டவரைப் பெரிதும் வேண்டுகின்றேம்.

# பட்டமும் பரிசும்.

வெள்ளிவிழா நாட்களில் கூடியிருந்த தமிழ்நாட்டின் பல ஊர்களிலுமிருந்து வந்த புலவர்களும் பெரியோர்களும் இவ் விருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து அரியதொண்டாற்றிவரும் திரு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்களுக்கும், பல ஆண்டுகளாக இதன் அமைச்சராக அமர்ந்து பணியாற்றியும் பல இனிய செய்யுட்கள் அமைத்தும் அரிய நூல்களைப் பதிப் பித்தும் பல மாணவர்களுக்கு அரிய தமிழ் நூல்களைப்பயிற்றி யும் தொண்டாற்றிவரும் திரு. R வேங்கடாசலம்பிள்ளையவர் களுக்கும் தமிழகத்தின் நன்றியையும் நன்மதிப்பையும் தெரி வித்தல் மூலமாகப் பட்டமும் பரிசும் வழங்கவேண்டுமென்று எண்ணினார்கள். அவ்வெண்ணத்தைத் திருப்பாதிரிப்புலியூர் அடிகளார் பல ஆண்டுகளாகத் தான் நன்கு உணர்ந்திருக்கும் திரு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் தமிழ் அன்னை யையே தனக்குத்தாயாகவும், தந்தையாகவும், சேயாகவும், உடன்பிறப்பாளனுகவும் மற்றுமெல்லாமாகவுங் கொண்டுள் ளார்களென்றும், தமிழ்ப்பணியே தன்பணியாகக் கருதிப் பல தொண்டுகளும் செய்துவரும் அவர்களைத்தமிழகம் தக்க வாறு சிறப்பித்தலியல்பேயென்றும் தன்னுட்டு மக்களாலேயும் அறிஞர்களாலேயும் அளிக்கப்பெற்று ஒருவரடையும் பட்டம் ஏனையபட்டங்களுளெல்லாம் சிறந்ததென்றும் தமிழவேள் என்னும் பட்டம் பிள்ளையவர்களுக்கு மிகவும் பொருத்தமான தென்றும் எடுத்துக்கூறினார்கள். பிறகு திரு. ச. சோம சுந்தரபாரதியாரவர்கள் பிள்ளையவர்களது பல பண்புகளை எடுத்துக்கூறி உலையாவூக்கமும் வள்ளன்மையும் பொருந்திய இவர்களுக்கு வேள் என்னுஞ் சிறப்பு எவ்வகையானும் உரிய தென்றும் இவ்வேள் என்னும் பட்டம் தமிழரசர்களால் பண்டைநாட்களில் வழங்கப்பட்டுளதென்றும் அச்சிறப்புக் கேற்ற பண்புகளெல்லாம் நிறையப்பெற்ற நம் பிள்ளையவர்கள் இக்காலத்துத் தமிழவேள் என்னுஞ் சிறப்பைப்பெற்று நீடு வாழ்வார்களாகவென்றும் வாழ்த்துக்கூறினார்கள். பின்னர் திரு. C. S. சீனிவாஸாச்சாரியாரவர்களும், திரு. S. சச்சிதா னந்தம் பிள்ளையவர்களும் பிள்ளையவர்களது அருங்குணம் செயல் முதலியவற்றையெல்லாம் பலவாக எடுத்துப்பாராட்டிப் பேசினார்கள். பிறகு அவையோர் மகிழத் திருப்பாதிரிப்

புலியூர் அடிகளார் பிள்ளையவர்களுக்குத் தமிழவேள் என்னும் பட்டத்திற்குரிய பொற்பூவைச் சூட்ட அவையோர் தமிழவேள் வாழ்க தமிழவேள் வாழ்க என்று பேரார்வத்துடன் வாழ்த்தினார்கள்.

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களைப்பற்றிப்பேசும் போது அடிகளார் பிள்ளையவர்களது இனிய செய்யுட்களைத் தாம் பலகாலமாக அறிந்து இன்புற்றுள்ளதாகவும் கரந்தையைச்சார்ந்து இனிய கவிகளியற்றிவரும் பிள்ளையவர்களுக்கு, 'கரந்தைக்கவியரசு' என்னும் பட்டமளித்தல் பொருத்தமானதென்றும் கூறினார்கள். பின்னர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் பிள்ளையவர்களது செய்யுளினினிமையைப் பலவகையாகப்பாராட்டிக்கூறி வெள்ளிவிழாவாகிய இன்று வெள்ளியின் மறுபெயராகிய கவி என்னும் பெயரொடு சார்ந்த பட்டமளித்தல் புலமைக்கும் நாளுக்கும் ஒத்திருக்கிறதென்றும் கூறி வாழ்த்தினார்கள். பின்னர் திரு. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும், திரு. R. P. சேதுப்பிள்ளையவர்களும், பிள்ளையவர்களது கவித்திறனைப்பலவாறு பாராட்டிப் பேசினார்கள். பிறகு திருப்பாதிரிப்புலியூர் அடிகளார் கரந்தைக்கவியரசு என்னும் பட்டத்திற்குரிய பதக்கத்தைப் பிள்ளையவர்களுக்களிக்க, அவையோர் கவியரசு வாழ்க, கவியரசு வாழ்க என்று பேரார்வத்துடன் வாழ்த்தினார்கள்.

திரு. பிள்ளையவர்கட்குக் கரந்தைக்கவியரசு என்னும் பட்டமளித்தபொழுது திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய பாராட்டுரை :—

இக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிய நாள்தொட்டு யான் திருவாளர். வேங்கடாசலம் பிள்ளையவர்களோடு கெழுதகை நண்பு பூண்டு, அவர்கள் தகவுகளை அறிந்து நுகர்ந்து இன்புற்றிருக்கின்றேன். அன்று முதல் இச்சங்கத்தின் அமைச்சராகவிருந்து பணியாற்றி, இஃது இத்தகைய உயர் நிலையெய்துதற்கு அவர்கள் பெரிதும் காரணராய் இருந்திருக்கிறார்கள். இச்சங்க வளர்ச்சிக்குத் துணைநின்ற அன்பர்கள் பலராயினும் இதனைத் தாங்கி நிற்கும் இருமதலைகள் சங்கத் தலைவராகிய திரு. பிள்ளையவர்களும், இருபதிற்றியாண்டினும் மேல் அமைச்சராக இருந்துபோந்த இவர்களுமே எனல் சிறிதும் மிகையன்று. இவர்களுடைய புலமைத் திறத்

தினேயோ, மதிநுட்ப மாண்பினேயோ ஈண்டு எடுத்துரைக்கக் கருதிற்றிலேன். அவற்றை இங்குள்ளார் பலரும் அறிவர். இவர்களுடைய கவிதைத் திறம்பற்றியே சிறிது கூற விரும்புகின்றேன். எந்நாட்டினும் பாவாணர் பண்டே சிறந்திருந்தனர் என்பர். அஃது உண்மையாயினும் இற்றைநாளினும் ஆண்டாண்டு ஒரு சிலர் இருந்துவருதல் கண்கூடு. திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்களின் செய்யுட்கள் பண்டைப் புலவர்களின் பாட்டுக்கள் போன்றே தெளிவும், ஆழ்ந்த கருத்தும், ஓசையின்பமும் அமைந்து விளங்குகின்றன. இச்சங்கத்தின் ஆண்டு விழாக்களின் தலைவர்களுக்கு அளித்துள்ள வாழ்த்துப்பாக்கள் பலவும் அவர்கள் இயற்றியனவே. அவற்றையெல்லாம் தொகுத்து நோக்கின் அஃதோர் தொகைநூல் என்று சொல்லத் தக்கதாகும். இவர்கள் பல ஆண்டுகளின் முன்பே தமது இளம்பிராயத்தில் தம்முடைய தமிழாசிரியர் மீது 'ஆசாறுற்றுப்படை' என ஓர் பிரபந்தம் இயற்றியுள்ளார்கள். அதிலிருந்து ஆசிரியர்மாட்டு இவர்கட்குள்ள அன்பின் திறம் புலனாகும். அவ்வாற்றுப் படையானது பழைய சங்கச் செய்யுட்களையொத்து உயர்ந்த தமிழ்நடையில் அமைந்துளது. செய்யுளும் தனித்தமிழில் இயற்றவேண்டுமென்னும் ஆர்வம் அவ்விளம்பருவத்திலேயே இவர்கள்பால் அரும்பியுள்ள செய்தி மிக்க மகிழ்ச்சியளிப்பதொன்றாகும். ஆனல், இவர்கள் இதுகாறும் இயற்றியன பலவும் வாழ்த்துப்பாக்கள் போன்ற தனிநிலைச் செய்யுட்களேயாதலின், காப்பிய நாடகங்களால் நுகரலாகும் நகை, உவகை, பெருமிதம் போன்ற சுவைகள் பலவற்றையும் நுகர்ந்து இன்புறுதற்கு இடன் ஏற்படவில்லை. எனினும் சிறுபான்மை அவை இல்லாமலும் போகவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி வளர்த்த வள்ளலாகிய பாண்டித்துரைத் தேவரவர்கள் இவ்வுலகினை நீத்தபொழுது இவர்கள் பாடிய கையறுநிலைச் செய்யுட்கள் அவலச்சுவை நிரம்பியனவாகும். செந்தமிழில் வெளிப்போந்த கையறுநிலைச் செய்யுட்கள் பலவற்றில் இவர்கள் பாடியனவே முதலிடம் பெற்றனவென நினைக்கிறேன்.

புலமைத் திறத்துடன், வளமுள்ள பாடல்களை வருந்தாது எளிதிற் பாடுந் திறமும் அமையப் பெற்ற இவர்கள் யாதானும் ஒரு காப்பியம்போல்வதனை இயற்றியுதவின், தமிழ் மக்கள் இவர்கள் கவிதை நலத்தை இன்னும் மிகுதியாக நுகர்தற்கு வாய்ப்பு உளதாகும்.

இயல்பிலே கவிதை யியற்றுந் திரு அமையப் பெற்றவர் களும், இக்கரந்தையுடன் பொருந்திய தொடர்புள்ளவர்களும் ஆகிய இவர்கட்கு, 'கரந்தைக் கவியரசு' என்னும் பட்டம் சாலப் பொருத்தமுடையதாகும். இப்பட்டத்தினைப்பெற்று, இன்னுஞ் சிறந்த பலசெய்யுட்களாலும், நூல்களாலும்தமிழை அணிசெய்து இவர்கள் நீடுவாழ வேண்டுமென்பது எனது உளமார்ந்த நல் விருப்பும், வேண்டுதலும் ஆகும்.

# தமிழரசி குறவஞ்சி நூலரங்கேற்றம்.

வெள்ளிவிழாவின் விழுமிய நிகழ்ச்சிகளுள் இந் நூலரங்கேற்றம் ஒன்று. இந் நூலாசிரியரின் பெருமையைத் தமிழுலகம் நன்கறியுமாகலின், இவ்வரங்கேற் றத்தினை விழாத்தலைவர் ஆகிய அடிகள், தமிழ்ப்புலவர்கள், ஏனை அறிஞர்கள் ஆய பலரும் ஆவலொடு எதிர்நோக்கியிருந் தனர். நூலாசிரியரின் அன்பராகிய வித்துவான் பொன் னுச்சாமி முதலியாரவர்கள் நூலை இன்னிசையுடன் படித்து வந்தனர். ஆசிரியர் அரிய இடங்களை விளக்கி வந்தனர். விழாமன்றத்திலும் ஒலிபரப்பும் கருவிகள் இணைக்கப்பெற் றிருந்த ஏனை ஈரிடங்களிலும் குழுமியிருந்த ஆயிரக் கணக் கினர்கள், சித்திரப்பாவையின் அத்தகவு எய்திக் கேட்டு இன் பக் கடலில் மூழ்கியிருந்தவர்கள், முடிவில் தாமெய்திய பெரு மகிழ்ச்சியினை நீண்ட கரவொலியாற் காட்டினர். தமிழறிஞர் சிலர் முன்வந்து நூலின் பெருமையைப் புகழ்ந்துரைத்துப் பாராட்டுச் செய்யுட்கள் பகர்ந்தனர். முடிவில் அவைத் தலைவ ரவர்கள் மிகவும் பாராட்டிப்பேசி, ஆசிரியரை வாழ்த்தினர்.

## தமிழரசி குறவஞ்சி.

'குறவஞ்சி' என்பது தமிழில் உள்ள 'பிரபந்தம்' எனப் படும் சிறுநூல் வகைகளுள் ஒன்று. (குறவஞ்சி-குறப்பெண்.) இந்நூலுள் குறத்தியொருத்தி குறிசொல்லுதல், முதன்மை யான பகுதியாதலின், இந்நூல் குறவஞ்சி என்று வழங்கப்

படும்; அதனோடு பாட்டுடைத் தலைவன், தலைவி இவர்கள் பெயர் ஊர்களைச் சார்த்தி கும்பேசர் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி என்றும் வழங்கப்படும், அம்முறையில் பாட்டுடைத் தலைவியின் பெயரைச் சார்த்தி, தமிழரசி குறவஞ்சி என்று இந்நூல் வழங்கப்பட்டுளது.

## குறவஞ்சி நூலின் இலக்கணம்.

இந்நூல் நாடகஅரங்கு(மேடை)களில் ஏறி நடித்தற்குரிய தோர் நாடகநூலாகும். ஆகவே நாடக உறுப்பினர்கள் பாடற் கேற்றவாறு பலவகையான இராக தாள அமைதிகளையுடைய 'கீர்த்தனங்கள்' என்று வழங்கும் இசைச் செய்யுட்களை, (வெண்பா, அகவல், விருத்தம் முதலாயவை இடையிடையே வரப்) பெரும்பான்மையினவாகக் கொண்டிருப்பது இதன் இயலாகும். இதனுட் கூறப்படும் பொருள் அமைதி:—ஒரு தலைவன் பவனி எனும் உலா வருவான். அதுகாலைத் தோழிமார்களுடன்கூடி ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கும் தலைவியொருத்தி, அவ்வுலாஆரவாரத்தால் தலைவன்வருகை யறிந்து, அவனைக் காணச்செல்லுவாள். சென்று காதலுற்று வருந்துவாள். வருந்தவே தோழிமார்கள் காரணம் உணர்ந்து ஆற்றுவர். ஆற்றவும் ஆற்றாளாகி அவர்களுள் ஒருத்தியை, தலைவன்பாற் றூதுபோகவேண்டி, அவனைக் காணவேண்டும் இடம் காலம் அவன்பாற் கூறலாகும் உரை இவைகளைக் கூறியனுப்புவாள். அனுப்பி, நிலாவாலும் தென்றல் முதலியவற்றாலும் வருந்தி, அவைகளைப் பழித்துரைத்து மயங்கித் தூதுசென்றவளை எதிர்நோக்கியிருப்பள். இந்நிலையில் குறத்தியொருத்தி தெருவில் குறிகூறிவருவதனை மற்றொரு தோழியாலறிந்து, அவளை வரவழைத்து அவள் நாடு, மலை, ஊர் வளங்களைக் கேட்டுப் பின் குறி கேட்டிருப்பள். குறத்தி அவ்வளங்களையெல்லாம் விரித்துரைப்பதுடன், தலைவி விரும்பிய தலைவன் விரைந்து வந்து தலைவியை மணந்துகொள்வன் எனக்குறிகூறி முடிப்பள். அக்குறத்தியைப் பிரிந்து வேட்டஞ்சென்ற குறவன் அவளைத் தேடிவந்து கண்டு மகிழ்வன். தூது சென்றவள் தலைவன் இணக்கம்பெற்று அவன் அளித்த மாலையுடன் வந்து சேர்வாள். பின்னர், எல்லோரும் ஒருங்குகூடி இன்புற்று மகிழ்வர் என்பதாகும்.

இவற்றின் விரிவுகளைத் தமிழ்த்தாயின் திருமகனார், தமிழர்தம் பெருவாழ்வு ஆகிய ஐயரவர்கள் பதிப்பித்துள்ள சர

பேந்திர பூபால குறவஞ்சி நாடகத்திலும், குற்றாலக் குறவஞ்சி முதலியவற்றிலும் நன்குணரலாகும்.

## தமிழரசி குறவஞ்சி நூலின் சிறப்பு.

இந்நூல், தமிழ் இலக்கணம் இலக்கியங்களில் முறையாக நிரம்பிய பயிற்சியுடைய புலமையுடையாரும், கற்றதன் பயனாகிய சமயப்பற்று, சமயநூற் றெளிவுகள் மிக்குடையாரும், பலசிறந்த பண்டிதர்கட்குத் தமிழ்கற்பித்த ஆசிரியர்ஆவாரும், விரிவுரை இயற்றல் செய்யுளியற்றல்களில் மிக வல்லுநரும் சிறந்த தமிழ்த்தொண்டுகள் செய்து வருபவரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தே 'ஆசிரியர்' எனும் சிறப்புப்பட்டம் பெற்றவருமாகிய தோரமங்கலம், ஆசிரியர், திரு அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றதாகலின், இதன்சிறப்புக்களை விரித்துரைத்தல் எளிதொன்றன்று. என்றுலும், இயன்ற வரையில் அங்கங்கே இரண்டொன்று காட்டப்படும்.

இந்நாலுட் கூறப்படும் பொருள் தமிழ்நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்ருகியதும், தன்பெயராகிய சுவாமிமலை என்பதைக் கூறிய அளவானே, எந்தச் சுவாமிமலை, என்னுது யாவரும் முருகக்கடவுள்மலை என்று உணர்ந்துகொள்வதோடு, மலைகட்குரியனுகிய அச்சுவாமியின் மலைகள் பலவற்றுள் எம்மலை என்னுது யாவரும் எளிதின் உணரும் தலைமையும் பெருமையும் வாய்ந்ததுமாகிய சுவாமிமலையில், தமிழ்ச்செல்வியாகிய ஒரு கன்னிப்பெண், தமிழரசி யென்றே இயற்பெயர் வாய்ந்து, அம்மலைபோலச் சிறப்புணர நின்றவள், தன் தோழிமார்களுடன் கூடிப் பந்தாடித் தமிழ்த் தெய்வ வாழ்த்துக்கள் பாடி மகிழ்ந்திருக்கின்ருள். அதுகாலை தமிழவேளாகிய சேவ்வேள் அத்தலத்தில் உலா வருகின்ருன். உலாவின் ஆரவாரம் கேட்ட அப்பெண்ணரசி, தன் தோழிமார்களுடன் அவ்வுலாக் காணச்சென்று, அவ்வேளின் பேரழகில் ஈடுபட்டுக் காதலுறுகின்ருள், கவல்கின்ருள். உணர்ந்த தோழியர் மாற்றவும் தேற்றவும் மாறித்தேருளாய், அவர்களுள் ஒருத்தியைத் தூதுவிடுத்து, எதிர்நோக்கியிருப்பாள், நிலா, தென்றல் முதலியவற்ருல் வருந்தி அயர்கின்ருள். இந்நிலையில், தமிழ்நாட்டுப் பொதியமலைக் குறத்தி யொருத்தி, அங்குக் குறிகூறிக்கொண்டு வருபவள், அங்கு மற்ரொரு தோழியால் வரவழைக்கப்பெற்றுவந்து, தன் நாடு, மலை

வளங்களையும், தமிழ்நாட்டுத் தலவளம் முதலியவற்றையும் கூறி, 'நீ விரும்பிய தலைவன் நின்னை விரும்பிவந்து விரைவில் மணப்பன்' எனக் குறிகூறி முடிக்கின்றாள். அக்குறத்தியைத் தேடி அவள் கணவன்வர, தூதுபோனவள் தலைவன் இணக்கம்பெற்று அவன் தந்த மாலையுடன் வர இங்ஙனம் யாவரும் இன்பவாழ்வினை இனிது எய்துகின்றனர்.

இந்நூலாசிரியர் இயற்றமிழ்ப் புலமையொடு இசையறிவும் மிக்குடையராதலின், சங்கராபரணம், பைரவி, செஞ்சுருட்டி, காம்போதி, மத்தியமாவதி, முகாரி, புன்னாகவராளி, சகானா, தோடி, நாதநாமக்கிரியை, அடாணா, கலியாணி முதலாய எண்ணிறந்த இராகங்களில், தாள அறுதியிட்டு வகுக்கப்பெற்ற கீர்த்தனங்களாகிய இசைச் செய்யுட்கள் இந்நூலில் சொல்வளம் பொருள்வளங்களுடன் மிளிர்கின்றன. 'இராக்காலங்கள் இனி இராக்காலங்களாகும்' எனுமாறு பெருகிவரும் இச்சினிமாக்காலத்தில், வெறும் இசைப்பயிற்சியேயுடையார், தாமே கீர்த்தனம் முதலிய இயற்றப்புகுந்து, சொற்பிழை பொருட்பிழைகளுடன் ஏதோ பாடியாடிக்களிக்கும் இக்காலத்தே, இத்தகைய இசையறிவு சான்ற புலவர்கள், இசைச்செய்யுட்கள் பாட முன்வந்திருப்பது தமிழுலகிற்கு ஒரு நற்செய்தியேயாகும்.

இந்நூற் செய்யுட்களின் எளிமை இனிமைகளை ஆங்காங்கு இரண்டொரு அடிகளைக்கொண்டு கண்டு செல்வாம்.

பாட்டுடைத் தலைவியின் வருகையால், அவள் அழகினைச் சிறப்பிக்குமிடத்து, குறவஞ்சி நூலின் இயற்கை நெறி, அவ்வக்காலத்து உலகவழக்குச் சொற்களை தங்குதடையின்றி அமைப்பதொன்றாகலின்,

(பைரவி, சாப்பு)—கண்ணி.

'மெல்லி திடையென்னவே யள்ளுப்பூண்டஒட்டியாணத்தாள்—உயிரின்
மிக்கதேனுமுயர் கற்புக்கினையதெனு நாணத்தாள்'

என்றுகூறி ஒட்டியாண அணியை 'அள்ளு' ஆக்கி இடையின் மென்மையினை அழகுபெற எடுத்துக்காட்டுகின்றார். இம் முதலடி யாவரும் தாமே யுணர்ந்து மகிழும் எளிமையை யுடையது. இரண்டாவது அடியோ, உயிரினும் சிறந்தது நாண், அந்நாணினும் சிறந்தது கற்பு எனும் நூல்வழக்கினை

உணர்ந்தவர்கள் அறிந்து மகிழவும், பிறர் அன்னவர்களிடம் கேட்டு உணர்ந்து அறிவு வளர்ச்சி பெற்று மகிழவும் அருமை யாகப் பாடப்பெற்றுளது. இங்ஙனம், படிப்பவர்கள் தாமே யறிந்து மகிழும் இடங்களாற் புகுவாய் செய்து, படிப்படி யாக அறிவு வளர்ச்சியை எய்துவித்து மகிழ்விப்பது பேரறிஞர்கள் பெருந்திறனாகும்.

இக்குறவஞ்சியில், ஏனைக்குறவஞ்சிகளினும் சிறந்து விளங்கும் பகுதி தலைவியரும் தோழியரும் கூடித் தமிழ்த் தாயின் பெருமையைப் பாராட்டிப் பாடும் பகுதியாகும். இதனைச் செஞ்சுருட்டி இராக ஆதிதாளத்தில் தேன் ஒழுக் கெனக் கூறலாகும் கண்ணிகளாற் பாடுகின்றவர், பரமசிவன், திருமால், மீனாட்சியம்மை, கணபதி, முருகன் முதலான வர்கள் தமிழைப் போற்றிய அருஞ்செயல்களை அமைத்து,

'அந்தமு மாதியுமில்லா வொருமுதலான பரம்பொருளே—உனை
முந்தவிரும்பித் தலைவனென்றோத முதற்சங்க மேறினனே.

செந்திருமாலுந் தனைவட நூன்மறை நொந்துபுறந்தொடர—உன்றன்
விந்தை மிகும்பின் னழகினைக் காண்பது வேண்டித்—தொடர்ந்தனனே.

பிள்ளைத்தமிழ்தன்மேற் பாடும்புலவர் பிரானுக்கு முத்து வடம்—கூடல்
வள்ளைக்குழைக்கயற் கண்ணி வழங்கிநின் மாட்சி தெரிந்தனளே.

முட்டையெனப்பாடுகென்று செவ்வேளுன் முழுச்சுவை வேட்டனரே—ஔவை—
யிட்டவகவல் புனைந்து கரிமுகத் தேந்தலு மோங்கினனே.'

என்றெல்லாம் பாடித்தமிழ்த்தேவின்பாற் கொண்டுள்ள தம் தெய்வப் பற்றினை இனிது காட்டிச் செல்கின்றனர். இத் தகைய தமிழ்த் தெய்வவாழ்த்துக்கள் கரந்தைத் தமிழ்ச்சங்க மாணவர்கட்கு என்றும் அறாத பெருவிருந்தாகும். இனி, 'மாதர் குழாம் புகுதல்' என்ற பகுதியில், (செஞ்சுருட்டி, ஏகதாளம்) 'மாமயிலின் குலம்போல மான்கணங்கள் போல'- என்று தேன் ஒழுக்கெனத் தொடங்குகின்றார். இதனைக் காண்பார் சிலர், இங்ஙனம் பாடுதல் ஒரு அருமையா, என எண்ணலாம். நல்லது, இதனை வைத்துக்கொண்டு பின் னடியை அவர்கள் முடிக்கட்டும், எவ்வளவு நேரம் வேண்டி யுளதென அறிவர். இன்னும், மாமயிலின் குலம் போல

மான்கணங்கள்—போல—என்றதனோடு, 'வந்தனர்கள் பல கோடி மங்கையர்கள்' என்றஆசிரியர் அடியையும் தருவோம்; 'போல' எனற்கேற்ப ஒரே ஒருசொல் ஈற்றில் அமைப்பார் களாக. அவ்வொரு சொல்லிற்கே மிகுநேரம் கழிப்பார் பலர் உளராவரன்றே! நம் ஆசிரியர் அங்கமைத்த சால என்பது எத்துணைச் சாலப் பொருத்தமானது! காண்மின்! இங்ஙனமே,

'காமனழ கனைத்து மிந்த மாமயிலின் மேலோன்'

என்ற இதனை வைத்துக்கொண்டு, பின்னடியை அமைத்துப் பார்ப்பின்,

'காலழகிற் காலழகும் காணாதே யென்பர்'

என்ற ஆசிரியரின் அடியின் பெருமை காணப்பெறும். இங் ஙனமாய தேன்ஒழுக்கங்கள் பல.

இனி, காதல் என்பதொன்றை எடுத்துரைக்கப்புக்க நூலாசிரியர் பலர், நூல் நூலாக விரித்து எழுதி முடித்திருப் பினும் அவற்றுட் பல படிப்பவர்கள் மனதைக் கவர்ந்து தெளிவு படுத்துவனவாக இல்லையே! உண்மைக் காதலுற் றார்க்குத் தம் காதலரில்லாவிடத்து உலகப்பொருள்கள் எத்துணைச்சிறந்தன விருப்பினும், எத்துணைச்சிறந்த உற்றார் உறவினரிருப்பினும், உலகம் உலகமாகாது எனும் உண்மையை, நம் ஆசிரியர் தலைவி காமுற்று வருந்துதல் என்ற பகுதியில் (முகாரி அடதாளம்) காதல் இன்னதென முதன்முதல் அறிந்து கூறும் தலைவியின் கூற்றாக வைத்து,

ஏதுலகப் பொருள்யாவும் பயனற்றுக் காணுதே—எனக்
கின்பம் தரற்கவ ரேபிறரில்லென்று தோணுதே

என்றுகூறிச் சிறரும் காதலின்னதென எளிதினுணருமாறு உரைத்துச் செல்லுகின்றார்.

இனி, நிலாவினைப் பழித்தல் எனும் பகுதியில், நிலா மதிக்குரிய களங்கம், தேய்தல் முதலாய குறைகளைச்சுட்டி இகழ்வது எளியதாகவும், ஆசிரியர், அம்மதியின் உயர்ச்சி யைச் சுட்டும் அதன் பிறப்பிடமாகிய பாற்கடலையும் உடன் பிறந்தாளாகிய திருமங்கையினையும் வலிய எடுத்துரைத்துக் கொண்டு, சிறிதும் தங்குதடையின்றி, அவைபற்றியும் மதிக் குக் குறைகூறும் அழகு வியக்கத் தக்கதாகும்.

புன்னாகவராளி—ஆதிதாளம்.

தங்கைதிரு மங்கையெனும் வெண்ணிலாவே—நீ
சாரிற்கதவேனடைப்பாள் வெண்ணிலாவே.

பாற்கடலிற் றோன்றிடினும் வெண்ணிலாவே—விடம்
பட்டவிட மாமதன்றோ வெண்ணிலாவே.

என்றுரைத்த ஆசிரியர் திறமை எத்துணை வியக்கத் தக்க தாகும்!

இனி, இவ்விடங்களிலெல்லாம் நின்று நின்று முற்றும் பார்த்துப் போனால்-பார்த்து மகிழ இடமிலாது போய் விடுவதஞ்சி, நெடுந்தூரம் போய்ப்பின் பார்ப்போம்.......... குறத்தி வந்தாள். மலைவளங் கூறுகின்றாள். மலைவளம் காண் கின்றோமா? ஆசிரியர் கலைவளங் காண்கின்றோமா? அறிமின்.

புன்னாகவராளி—ஆதிதாளம்.

மஞ்சு,துஞ்சும் பிடியெனவே வந்துகரி நோக்கும்,
வருவேங்கை நிறம்போல தருவேங்கை பூக்கும்.
[முதற்பொருளாகிய மலையின் உயர்ச்சி.]

வேலரிருப் பென்றுமயில் தோகை விரித்தாடும்
விஞ்சைமட வாரினெதிர் கின்னரங்கள் பாடும்.
[கருப்பொருள்கள் தெய்வம்.]

சந்தனத்தி னுலக்கைகொண்டு செந்தினையைக் குறுவோம்
சாடிடவேயக் கோடுசொரி தேனினையும் பெறுவோம். [உணா]

இங்ஙனமாகிய பலகண்ணிகளால், தொல்காப்பிய முத லாய நூல்களிற் காணப்பெறும் முதற்பொருள், கருப்பொருள் களின் சிறப்புக்கூறல் கற்றோர்க்கு மகிழ்ச்சி தருவதாகும்.

'பிரிதல் பிரிந்திருத்தல் மிகவூட லிரங்கிடுதல்
பெறுமொரு நாற்றிணையுமெங்கள் திணைப்பெருமை பேசும்'

என்றெல்லாம் உரிப்பொருளின் நுணுக்கங்கள் மிளிரும் கண்ணிகள் கற்றோர் மனத்தினைப் பிணிக்கவைத்த கண்ணி களாகத் திகழ்கின்றன.

இங்ஙனமே குறத்தி கூறும் நாட்டுவளம் என்ற பகுதி யைப் படிக்குங்கால், நாட்டுவளம் காண்கின்றோமா? ஆசிரியர் பாட்டுவளம் காண்கின்றோமா? என மயங்கவேண்டிய நிலை எய்துகின்றது.

கேதாரகௌளம்—சாப்பு.

அலை முழக்க முழவென வண்டிசை
யாளராகச் செந் தாமரைத் திமுனம்
குலவனப் பெடை தன்னை மலர்க்குலங்
கொப்புளிக்கு நறும்புனலாடியும்

என்றெல்லாம் செல்லும் பெருமித நடைகள், பாவலர் கண்டு மகிழ்தற்குரிய நாவளம் காட்டுஞ் செய்யுட்களாகும்.

இனி, சொல்லணிகள் பாடுவோரின் திறல், அவர்தம் செய்யுளில் அவை அமைந்திருக்கும் எளிமை இனிமைகளைப் பற்றி நிற்பதொன்றாகும். அதுபற்றி ஆசிரியர் திறலினைக் காண்மின்!

'ஊனப்பிறவி கருக்கு மரன்—உதவுமிளைய திருக்குமரன்'

'* * * * *'

'நின்றாளென்றுமறவாதே—நின்றாளென்று நினைந்தருளே'

என்றெல்லாம் செல்லும் அடிகளின் எளிமை இனிமைகளைக் காண்மின்!

ஆசிரியர் பலவிடங்களிற் கருதியமைத்துள்ள பொருணுட்பங்கள் பண்டைத் தமிழ்நூற் பயிற்சியிலடிப்பட்டார்க் கன்றி ஆழம் கண்டறியலாகாத கடல்போன்று திகழுகின்றன. அவற்றுளொன்று

'தலைவி தனிமையிற் புலம்பல்' எனும் பகுதி:—

'நோக்குமிடம் பார்த்து நுழைந்தேனுதல் வேர்த்தடங்கா
நாக்கு பெருங் காதலையுட் கரந்து பிறர்க் கொளித்தேன்
தாக்குமவர் கைவேலி னுங்கொடிய நோக்கந்
தனத்திடைப்பட்டது கூந்தல் சரிந்து குழை கழன்று'

என்று இங்ஙனம் செல்லும் அடிகள், தொல்காப்பிய மெய்ப் பாட்டியலைக் கற்றார்க்கன்றிச் சிறிதும் விளங்கா. இப் பாட்டினை மெய்ப் பாட்டியற் பொருளொடு பொருத்தி உரை கூறுமிடத்து, அதுவே ஒருகட்டுரையாகும்.

இனி, இறுதியாக, சிங்கன் கூற்று (அடாணா-ஆதிதாளம்) என்றபகுதியில் சிறிது காட்டிப் பின் வாழ்த்துப் பகுதியோடு முடித்திடுவாம்.

பரவுறுடையே—பறவைகள் பரவுறுடையே—(பறவைகள் பரவுகின்றன என்று கூறுகின்றான்) இதற்குக் கூறும் உவமைகளைக்காண்மின்.

*　　*　　*　　*　　*

'அன்னையை மீட்டன்றி வேறு செய்யேனென
ஆவியுடலும் பொருளு மவட்கெனத்
தன்னல நீர்விட்டுத் தானங் கொடுத்தேயா
தரிக்குமு மாமகே சன்றமிழார்வம் போல—பரவு'

இப்பகுதி முழுவதும், சங்கத்தலைவரின் அரிய செயல்களையே உவமையாகக் கொண்டுள்ளன. இந்நூலில் ஒருகுறை கூற வேண்டுமாயிற் கூறுவாம். இங்கு, ஆசிரியர் வரதநஞ்சையர் இந்த பாடலின் இன்னிசைச் செல்வம்போல் பரவுடையே. என்று ஒரு பாடலிருப்பின், இன்னுஞ் சிறப்பாகவிருக்கும் என்செய்வது! ஆசிரியர் தற்சிறப்புக் கூறுரன்றே!

வாழ்த்து

'மாமறையின் முடியானை மருவு தெய்வப் பிடியானை
சாமிமலைக் குடியானைச் சண்முகனை வாழ்த்துகின்றும்'

---

இந்நூலைச் சிறப்பித்து,
கரந்தைக்கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் பாடிய

## சிறப்புப்பாயிரம்.

இந்த முதிய பழைய தமிழ்மகட் கிவ்வணி யென்னேயோ—இதைத்
தந்தவ னிக்கலி காலத்தவ னலன் தனிப்புல வன்போலும்—அல
தந்தக் கரந்தையஞ் சங்கத் தவருக்கொ ராசிரியன்போலும்
எந்த நிலையின ளுபினும் வாழியர் இவ்வணி காட்டினனே—என
வந்த மகளிர்கள் வாழ்த்து வரதையன் வாழிய வாழியரோ.

# தமிழ்மன்றம்.

வெள்ளிவிழா நாட்களில், தமிழ்க்கலை வளர்ச்சிக்கு நிலைத்ததோர் பணி செய்யக்கருதிய நம் சங்கம், வெள்ளி விழாவிண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தபடி தமிழ்மன்றம் என்னும் பெயருடன் ஒரு தமிழறிஞர் பேரவையை நிறுவிற்று. இத்தமிழ் மன்றத்தின் நோக்கங்களையும், அமைப்பையும், மன்றம் மேற்கொள்ளவேண்டிய தொண்டுகளையும் விரிவாகவும் தெளிவாகவும் நம் சங்கத் தலைவரவர்கள் பின் வருமாறு எடுத்துரைத்தார்கள். ஒவ்வொரு நாடும் அதன் மக்களும் மேன்மேலும் உயர்வடைந்து தாம் உயர்வடைவதோடல்லாமல் உலகமக்கட்டொகுதி யென்னும் பரந்த கூட்டம் உயர்வடைதற்குத் தாமும் துணைபுரிதலே முடிந்த கொள்கையாகக் கொள்ளவேண்டுமென்பது எக்காலத்திலும் எந்நாட்டிலும் உள்ள பேரறிஞர்களது நோக்கமாகும். இக்கொள்கையை மேற்கொண்டு மக்கட்டொகுதிக்கே நலஞ்செய்தலைக் கடமையாகக் கொண்ட நன்மக்களெல்லாம் முதலாவதாகத் தங்கள் தங்கள் நாட்டின் மொழியையும் கலையையும் வளம்படுத்துவதையே மேற்கொண்டனர். இவ்வாறு மேற்பார்வைக்கு வேறுபட்டனவாகத் தோன்றும் மொழிகளும் பல பிரிவான கலைகளும் தக்கபடி போற்றி வளர்க்குமிடத்து அவ்வளர்ச்சியின் பயன் பரந்த வுலகத்திற்கே உரியதாகுமென்பது அப்பெரியார் கருத்திற்கண்ட காட்சியாகும். பல வேறிடங்களில் வழங்கி வரும் மொழிகளிலும் பலகாலங்களுக்கு முன்பு வழங்கி இப்பொழுது வழக்கிழந்த மொழிகளிலும் காணப்படும் உயர்ந்த இலக்கியப் பகுதிகளெல்லாம் உலக மக்களால் காலம் இடம் என்னும் பிரிவுகொண்டு புறக்கணிக்கப்பெறாது தத்தமக்குரிய பொருள் போன்று கருதிப் போற்றப் படுவதை நாம் இன்றும் காண்கின்றோமல்லவா? செகப்பிரியர் வேற்றுநாட்டுப் புலவரென்று கருதி அவர் நூலாற் பெறத்தக்க இன்பத்தை மறுக்கும் தமிழறிஞர் எவரேனுமுளரோ? அதுபோலவே சிலப்பதிகாரம் பண்டை நூலென்று கருதி அதனைப் பயிலாது விடும் பான்மையர் இக்காலத்துளரோ? ஒரு நாட்டு அறிஞனது ஆராய்ச்சியின் பயனாகவும் அறிவின் பயனாகவும் தோன்றும் நன்மைகளெல்லாம் எந்நாட்டாராலும் ஒரே தன்மையாக

துய்க்கப் பெறவில்லையா? நீராவி வண்டியிலேறும் சீனனும் அச்சிட்ட நூலைப் படிக்கும் ஆங்கிலேயனும் தங்களுள்ளத்து ஏதேனும் வேற்றுமை கருதுகின்றாரா? இவற்றை உற்றுநோக்குங்கால் பலவேறுபட்ட இடங்களிலும் காலங்களிலும் தோன்றும் அறிவின் பயனெல்லாம் மன்பதை நலம் என்னும் பெருநிதிக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காலமும் செலுத்தும் காணிக்கையே யெனத் தோன்றவில்லையா? ஒவ்வொரு காலத்திற்கும் நாட்டிற்கும் தமக்கெனக் கொள்ளத்தக்க சிறப்பியல்களும் மக்கட்டொகுதிக்கே பயன்படுவனவாய பொதுவியல்களும் உளவென்பதையும் இவ்விரண்டும் ஒருசேர வளர்ந்தே பயன்தரற்குரியன என்பதையும் நாம்என்றும் மனங்கொள்வது இன்றியமையாததாகும். ஒவ்வொரு நாட்டின் மொழியையும் கலையையும் மேம்படச் செய்வது அவ்வந்நாட்டு அறிஞர்களது கடமையேயாகும் என்று கருதினும் அவ்வறிஞர்களைப் புரத்தலும் போற்றுதலும் அவ்வந்நாட்டு அரசியலாரும் மக்களும் மேற்கொள்ள வேண்டிய கடமையென்பது எவரும் மறுக்கமுடியாததாகும். வித்திருந்த வழியும் நிலனும் நீருமில்லாக்கால் பயன்படா தொழிவதொப்ப அறிவிருந்த வழியும் ஆதரவில் வழிப் பயன்படாதென்பது எடுத்துக் கூறவேண்டுவதில்லை. பல நாட்டு வரலாறுகளைக் கருதுவோமாயின் பெரும்பான்மையும் அந்நாட்டுக் கலைவளர்ச்சிகளெல்லாம் ஆதரவுக்குத் தக்க வண்ணமே வளர்ந்திருப்பதைக் காணலாம். மன்னர் ஆதரவின் வளர்ந்த நூல்களுங் கலைகளும்பல. மக்களாதரவில் வளர்ந்த கலைகளும் நூல்களும் பல. இவ்விரண்டுமில்லாது அறிவுதனித்து நின்று கண்டவுண்மைகள் சில.

மக்கள் ஆதரவும் மன்னர் ஆதரவும் பெற்று வளர வேண்டிய நிலையில் கலைகளும் இலக்கியமும் தம்மை ஆதரிப்பார்கருத்துக் கியையவே ஒடுங்கி நடக்கவேண்டியிருக்கின்றமையின் உண்மை காணுதற்கு இடர்ப்படுதல் கண்டு ஒவ்வொரு காலத்திலும் பேரறிஞர்கள் ஒருசிலர் கூடி மொழி, கலை முதலிய அறிவுவளர்ச்சிக்காய துறைகளில் உழைப்பாராயினர். அவ்வுழைப்பின் பயனால் விளைந்த நன்மைகளைக் கண்டவுலகம் அவ்வறிஞர் கூட்டம் பொருளாதரவற்றுத் தளராவண்ணம் பொருளுதவி செய்து போற்றியதுடன் அவர்கள் காணும் உண்மைகளும் முடிபுகளும் மன்னர் ஆணையினாலோ மக்கள் விருப்பு வெறுப்புக்களினாலோ மாறு

படா வண்ணம் அவ்வறிஞர்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்தும் பேணிவந்தது.

இவ்வாறு ஏற்பட்ட மன்றங்களினல் மக்கள் அடைந்த பயன் பெரிதாகும். ஆங்கிலநாட்டில் பெரும்புகழோடு இன்றும் நின்று அறிவுத்துறைகளில் நற்பணி செய்துவரும் கலைக்கழகமும் பிரெஞ்சு தேசத்தில் மொழியைச் செம்மைப் படுத்தற்கென வெழுந்து, சில நூற்ருண்டுகளுக்குள் பிரெஞ்சு மொழியை ஐரோப்பிய மொழிகளுள் முதன்மொழியாகச் செய்த மொழிக்கழகமும் நம் செந்தமிழ் நாட்டில் பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றித்தமிழ் நலங் கெடாது பாதுகாத்து வளர்த்ததோடமையாது பின் தோன்றும் மக்களது பேதமையையும் வலியின்மையையும் நன்குணர்ந்தே போற்ருது புறக்கணிப்பாரிடையேயும் தன் எழிலும் வலியும் மாருது நின்று பயனளிக்கும் வன்மையையும் தமிழுக்களித்ததேபோன்று நற்பணியாற்றிய தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் நம் பழைய சங்கங்களும் ஒருவாறு நாம் மேற்காட்டிய கொள்கைகளோடு எழுந்தனவேயாகும்.

தமிழ்மொழி தமிழ்க்கலை தமிழறிவு முதலிய வெல்லாம் தக்கவாறு போற்றப்பெருத இக்காலத்து நாம் மேற்குறித்த சங்கங்களை ஒத்ததோர் சங்கம் தமிழகத்துத் தோன்றுமாயின் பலவகையாய நன்மைகளைச் செய்தற்கு ஏற்ற துணையாயிருக்குமென்னுங் கருத்துடன் தமிழ் மன்றம் என்னும் பெயருடன் இவ்வறிஞர் பேரவையை நம் சங்க வெள்ளிவிழா நன்னளாகிய இன்று நிறுவமுன் வந்துள்ளோம். இத்தமிழ் மன்றம் தமிழ்மொழிவளர்ச்சி கலைவளர்ச்சி வரலாற்று ஆராய்ச்சி முதலியவற்றைத் தன் நோக்கமாகக் கொள்வதாகும். இம்மன்றம் ஓர் ஆண்டிற்கு ஒருமுறையேனும் கூடித் தான் மேற்கொண்ட தொழிலைப்பலவாறு பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு துறையிலும் வல்லவர்கள் ஒன்றுகூடி அவ்வத்துறையில் ஆராய்ச்சி செய்தும், அவ்வவ்வாண்டு தமிழ்மொழியில் வெளிவந்துள்ள நூல்களனைத்தையும் காய்தல், உவத்தலின்றி ஆராய்ச்சி செய்து, நிலவுதற்குரிய இன்ன, அல்லன இன்ன என்பதை வெளியிட்டும், அவ்வாண்டைய தமிழ்நூல், கலை, வரலாறு முதலியவற்றின் வளர்ச்சியை யாவரும் தெரிந்து கொள்ளக்கூடிய எளிய நிலையில் வெளி

யிட்டும், புதுவதாகவும் மொழிபெயர்ப்பாகவும் தமிழ்மொழியில் நூல்களைச் செய்தும் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைப் பேருலகம் அறிந்தின்புறுமாறு பிறமொழிகளில் மொழிபெயர்த்தும் தன்கடமையை ஆற்றுவதோடு தமிழ்மக்கள் அறிவுவளர்ச்சிக்கு ஒரு வழிகாட்டியாய் நின்று நிலவுமென்பது எம் கருத்தாகும். இம் மன்றத்தின் விரிவான வேலைத் திட்டங்களையெல்லாம் நன்கமைத்துத் தெளிவாக வெளியிடல் இம்மன்றவுறுப்பினர்கள் மேற்கொள்ளவேண்டியதொன்றாகலின் இங்கு சுருக்கமாகவும் மேற்போக்காகவும் சொல்லப் பட்டுள்ளது.

இம்மன்றம் நம் சங்கத்தின் சார்பிலே தோன்றுவதாயினும் தன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் தனக்கு வேண்டிய சிறப்புவிதிகளை அமைத்துக்கொள்வதிலும் தனி நிலையுடையதாகும். இம்மன்றவுறுப்பினரின் தொகை எக்காலத்தும் இருபத்தேழுக்கு மேல்செல்லலாகாது என்பதும் வயதில் முப்பது ஆண்டுகட்குமேற்பட்டவரே உறுப்பினராதற்குத் தகுதியுடையாரென்பதும் இவ்வுறுப்பினர்கள் தாங்கள் மேற்கொண்ட துறையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஒருநூல் இயற்றியேனும் பதிப்பித்தேனும் பணி செய்யாவிடில் உறுப்பினர் நிலையினின்றும் நீக்கம் பெறுவதோடு பிறகு உறுப்பினராதற்கும் உரியரல்லர் என்பதும் எக்காலத்தும் மாற்றவொண்ணு விதிகளாகும். தம் கடமையை ஒழுங்காக நிறைவேற்றிவரின் வாழ்நாள் வரையில் உறுப்பினராதற்கு உரியவராவார். இதன் உறுப்பினர்களை முதன் முதலாக இப்பொழுது கூடியுள்ள அறிஞர் கூட்டம் தேர்ந்தெடுக்கவேண்டியதாகும். மேற்கொண்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் இப்போது தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களது கடமையாகும். பிறகு எக்காலத்தும் இம்மன்றவுறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இம்மன்றவுறுப்பினர்களுக்கே யுரியதாகும்.

இவ்வாறு இம்மன்றம் நிறுவுதல் சார்பாக சங்கத்தலைவரவர்கள் பேசியவுடன் விழாத்தலைவர் திருப்பாதிரிப்புலியூர் அடிகளது வாழ்த்துரையும் அங்கு கூடியிருந்த பேரறிஞர்களது பாராட்டுரையும் பெற்று அறிஞர் கூட்டத்துள் அடியிற் குறித்துள்ள பெரியோர்களை உறுப்பினராகத்தேர்ந்தெடுத்து மேற்கொண்டுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரி

மையையும் அவ்வுறுப்பினர்களுக்களித்துத் தமிழ் மன்றம் நிறுவப்பெற்றது. உறுப்பினர்களை அவரவர்கள் ஒப்பம் பெற்றே தேர்ந்தெடுக்கவேண்டியதாயிருக்கின்றமையின் விழாவிற் கூடியிருந்த அறிஞர் கூட்டம் விரும்பிய சில அறிஞர்களை உடனே தேர்ந்தெடுக்க இயலவில்லை. அவ்வறிஞர்களோடு கடிதப்போக்குவரவு செய்து தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் உரிமையும் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர்களிடம் ஒப்புவிக்கப்பெற்றன. இம்மன்ற வுறுப்பினர்கள் கரந்தைத் தமிழ்ச்சங்கப்புலவர் என அழைக்கப்பெறுவர்.

## தேர்ந்தெடுக்கப்பட்ட புலவர்கள்.

1. திரு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள்.
2. ,, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்.
3. ,, ச. சோமசுந்தரபாரதியாரவர்கள்.
4. ,, பண்டித ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்.
5. ,, R. P. சேதுப்பிள்ளையவர்கள்.
6. ,, கரந்தைக் கவியரசர் R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.
7. ,, S. K. கோவிந்தசாமிபிள்ளையவர்கள்.
8. ,, T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்.
9. ,, N. கந்தசாமிபிள்ளையவர்கள்.

உ

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழாவின்போது, சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் அனுப்பிய பாராட்டுரை

(***Message***)

செந்தமிழ்ப் புரவலர் உயர்திருவாளர் த. வே. உமாமகேசுவரனுருக்கு, அன்பு. தங்கள் தலைமையில் தளரா வீறுகொண்டு தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பலதுறைப்பணிகளை வெற்றியுறப் புரிந்துவரும் **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி**

விழாவில் எனது உள்ளம் இன்புறக் கலந்து நிற்கிறது. என் மனவிழிகள் இவ்வெள்ளிவிழாக் கூட்டத்தை அணியுறுத்தும் செந்தமிழ்ப்பரிதிகளான உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார், புலவர்மணி ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், சைவமணி திரு. சச்சிதானந்தம்பிள்ளை, தனித்தமிழறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார், சேதுப்பிள்ளை, புலவர்மணிகளான வரதநஞ்சய பிள்ளை, துடிசைகிழார், சரவணமுதலியார், பன்னிருகைப் பெருமாள் முதலியார், இலக்குமணப்பிள்ளை முதலியோரை வணக்கமுடன் கண்டுவந்து, இன்று தமிழ்க்கொடிபிடித்து ஊர் தொறும், ஊர்தொறும் தமிழ் முழக்கம்செய்யும் செந்தமிழ் வீரரான திரு. சோமசுந்தர பாரதியாரைக்கண்டு வியந்து மகிழ்ந்து நிற்கின்றன! இத்தகைய தமிழரைப்படைத்த நமது தாயின் பெருமை இனி உலகளாவ ஓங்கி நிலந்தொளிரும் என்று என்னுள்ளத்தில் ஒரு இன்பச் சிலிர்ப்பெடுக்கிறது! தமிழுக்கே வாழும் தனித்தமிழர் நீடூழி வாழ்க! இவர் தாளாண்மையும் வேளாண்மையும் தமது நாகரிகத்தின் இருகைகளாகக்கொண்ட தமிழர் வீறும், சீரும், அறிவும் ஆற்றலும் இப்பெருந்தகையார் ஊட்டும் ஆவேசக்கனலால் ஓங்கியொளிருக!

ஐய, தங்கள் அரிய தமிழ்த்தொண்டு இன்று வெள்ளிக் கனிகாட்டியதைக் கண்டு உண்மைத் தமிழின் உள்ளம் இறும்பூ தெய்துகிறது. தங்கள் சங்கம் மேன்மேலும் தழைத்தோங்கிப் பலபொற்கனிகளும் வைரக்கனிகளும் பழுத்துப் பிறமொழிப்புட்க ளெல்லாம் நாற்புறத்தினின்றும் குழுமித் தமிழ்க்கனியுண்டு தமிழின் புகழைப் பாடச்செய்க! கரந்தையிற் கனலும் தமிழ்வேள்வித்தீ ஒவ்வொரு தமிழன் உள்ளத்தையும் பற்றி உயிர்க்கனலாகக் கொழுந்தேறுக! ஐய, தமிழ் நமது உயிர்ப்பு; தமிழகம் நமதுஉடல்; தமிழர்கூட்டம் நமது உட்கரணம்! இத்தகைய உணர்ச்சியெழுந்து தமிழ்த்தாயின் அருட்பெருமை மாந்தர் உள்ளத்தைத் தொட்டு விட்டால், அன்றே இத்தமிழர்கூட்டம் தலைநிமிர்ந்து உலகின் முன் நடக்கும்! காற்றும் உணவும் உயிர்வாழ்விற்கு எப்படி இன்றியமையாதனவோ அப்படியே தமிழும் தமிழர்அன்பும் நமது வாழ்விற்கு இன்றியமையாதனவாக உணரவேண்டும்!

பன்மொழி யாராய்ச்சியாளருக்குத் தமிழின் ஏற்றமும், இனிமையும் நன்கு புலனாகும். உலகின் தொன்மொழி தமிழே. உலகின் முன்மக்கள் தமிழரே. இது அசைக்கமுடியாத வர

லாற்றுண்மை. கற்றற்கும் சொற்றற்கும், பாடுதற்கும் எளிய இனியமொழி தமிழே. பிறமொழிச் சார்பின்றி தனித்தியங்குந் தகைமை வாய்ந்தது தமிழே. மூச்சுச்செட்டுள்ளது தமிழே. நாவலந்தீவிற்குப் பொதுமொழியாக உரிமைபெற்றது, பெருமை பெற்றது தமிழே. மற்ற மொழிகளெல்லாம் பின்வந்தனவே. தமிழில் ஒலிக்குறைவுள்ளது, வடமொழியைத் தமிழில் எழுத முடியாது என்பர் பலர். அவர் தமிழ் நெடுங்கணக்கின் நுட்ப மான அமைப்பை அறியார் என்க. தமிழ்ச் சொல்லமைப்பி லேயே ஒலிகள் நிரம்புகின்றன. ஆங்கிலம் உருது போன்ற மொழிகளைக்கூடத் தமிழிலேயே எழுதலாம் வழிதோன்றியது. வேண்டுவோர் இப்போது அச்சிலுள்ள **தமிழுணர்ச்சி** யென்னும் நூலிற் காண்க.

இவ்வளவு பெருமைபெற்ற நமது தாய்மொழியை உலக மெல்லாம் பரப்ப இத்திருவிழாவிற் குழுமிய அறிவாளர் உறுதி பூணுக. புலவீர், நாம் செய்தது துளி. செய்யவேண்டுவன கடலளவுள்ளன. **குல்வா (Gaulois)** மொழியிற்றோன்றி, கொச்சை ரோமன்மொழியுங்கலந்து முதலில் 1000 சொற் களுடன் இயங்கிய பிரெஞ்சுமொழி சுமார் 800 ஆண்டுகளில் ஒரு **லாரூஸ் அகராதியை** உண்டாக்க முடியுமானால், 5000 ஆண்டு களுக்கு முன்பே இலட்சம் சொற்களைக்கொண்டு இலக்கண வரம்புடன் விளங்கிய நமது தமிழ்மொழி ஏன் உலகில் முதன் மைபெறலாகாது? ஆங்கிலமும் ஜர்மனும் பிரெஞ்சும், வங்கமும், இந்தியும், எவ்வாறு இத்துணை புகழ்பெற்றோங்கின? தமிழர் நாட்டில் பிறமொழிகள் ஆதிக்கஞ் செலுத்துவானேன்? பிற மொழிகளைப்போலத் தமிழும் ஏன் உலகளாவிப் பரவக்கூடாது? தேம்ஸ்கரையில் வழங்கிய ஆங்கிலோஸாக்ஸன்மொழி காவிரிக் கரையில் வழங்குவதுபோல, காவிரிக்கரையில் வழங்கும் தமிழ் மொழி கங்கை, சிந்து, ஹோயாங்கோ, ரைன், ஸேன், வால்கா, மிஸோரி ஆற்றங்கரைகளில் ஏன் முழங்கலாகாது? பிறமொழி களை உலகளாவச்செய்தவரும் நம்மைப்போல மனிதர்கள் தானே? அவர்களுக்குள்ள ஆற்றல்நமக்கில்லையா? தமிழர்களே, தமிழ் தமிழெனஉயிர்ப்போம். எதைச் செய்தாலும் தமிழின் பெருமைக்காகவே, செய்வோம். நமது தாய்மொழி முன்னேறு மட்டும் நாம் வேறெதிலும் சிந்தை சிதறுமற்காப்போம். தமிழர் ஒரு குலமாக வாழுவோம்.

கிப்பன், மிஷ்லே, ஹர்ஸல், முதலிய மேற்குநாட்டு வர லாற்றாசிரியர்களைக் கற்றபிறகு அவர்போன்றே தமிழர் வர

லாற்றை முறையாக எழுதவேண்டும் என்று சென்ற மூன்றாண்டு களாகப் பல குறிப்புகளைச் சேர்த்திருக்கிறேன். இங்குக் குழுமி யிருக்கும் புலவர்மணிகள் சங்ககாலம் முதல் நானாசாகிப்பின் படையெடுப்பு வரையில் தத்தம் ஊர்வரலாறுகளினின்று கிடைக் கத்தக்க செய்திகளையும் அவரவர் ஊர்களில் வழங்கும் வரலாற் றிற்கேற்ற பழங்கதைகளையும் எழுதியனுப்பினால் நன்றியுடன் வரவேற்றுத் தகுமுறை நூலிற்சேர்க்கலாம். ஆங்கிலேயர் ஆட்சி வந்தபிறகு வரலாறு சில்லா கெசட்டுகளினின்று தெரி கிறது. முன்னிகழ்ச்சிகளே வேண்டும். எப்படியும் சுமார் 500 பக்கமுள்ள உண்மையான தமிழர் வரலாறொன்று வெளியிட்டுத் தமிழருக்களிக்க ஆர்வமுள்ளது. திருவருள் துணைபுரிக!

கரந்தைத் தமிழ்ச்சங்கப்பணி தமிழருக்கெல்லாம் ஒரு புதிய எழுச்சியைத் தரவேண்டும். அயர்லாந்து விடுதலைக் கிளர்ச்சியின்போது, தொழிலாளர் எல்லாம் ஒரு உறுதிபூண்ட வர். என்னவுறுதி? ஐரிஷ்மொழியிற்பேசினாற்றான் செவிசாய்ப் பது. ஆங்கிலம் பேசினாற் கேட்பதில்லை. கடையில் ஆங்கி லத்தில் "இதைக்கொடு" என்றால் பதில்வராது. தாய்மொழியிற் பேசினாற்றான் சாமான் வாங்கலாம். அம்மாதிரித்தமிழர் ஒரு உறுதிபூணவேண்டும். அப்போது அயலவரும் தமிழைக்கற்பர். வடஇந்தியாவில் 'இந்தியில்லாமற் காரியம் நடவாது' என்று எப்படி மிரட்டுகின்றார்களோ அந்தமாதிரித் தமிழ் நாட்டிற்குப் போனால் தமிழ்தெரியாது அலுவல் நடவாது. தமிழ்பேசாவிட் டால் சாப்பாட்டுக்கடையிற் சோறு கிடைக்காது என்னும் நிலைமை வரவேண்டும், தமிழர் உள்ளம் தமிழ்க்கனல்பற்ற வேண்டும். அக்கனல் உலகெல்லாம் பரவவேண்டும்.

தமிழரையெழுப்பத் தமிழிலும், உலகில் தமிழ்மாண்பை நிலைநாட்ட ஆங்கிலத்திலும் நாம் ஓயாது நூல்களையும் செய்தித் தாட்களையும் வெளியிடவேண்டும். தமிழ்க்கொடி வானளாவிப் பறக்கட்டும்! தமிழர் பெருமை திசைதொறுந் திசைதொறும் பரவி விளங்கட்டும்! தமிழணங்கு அரியணைவகித்துப் பிற மொழிகள் குற்றேவல்செய்ய இலக்கியவுலகை யாளட்டும். இதுவே இவ்வுள்ளத்திற் பற்றியேறும் ஆர்வம்! இந்த ஆர்வத் தையே கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழாவிற்கு அன்புக் காணிக்கையாக அனுப்புகிறேன்!

## தமிழுணர்ச்சி

எண்ணுறும் போது தமிழையே யெண்ணிர் !
இசைத்துழித் தமிழையே யிசைப்பீர் !
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர் !
உண்ணுறும் போதும், உறங்கிடும் போதும்
உயிருளந் துடித்திடும் போதும்,
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுமின் !

சிங்கம்போ லெழுந்து வாருங்கள், அன்புச்
செல்வர்காள் அன்னையின் பணிக்கே,
தங்கம்போற் பொலியுந் தனிரிள முதியாள்
புகழினைச் சகமெலா முரைப்போம் !
செங்கதிர் பரவுந் திசையெலாந் தமிழின்
சீர்முர சதிர்ந்திடச் செய்வோம் !
அங்கையில் உழைப்பும், ஆண்மையை மனத்தும்
அணிந்துட னருட்பணிக் கெழுமின் !

---

போடிநாயக்கனூர், இராவ்சாகேப்,

### திரு. A. S. அழகண்ணன்செட்டியார் அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நலம் பாராட்டி
ஒருஆயிரம் வெண்பொற்காசு நன்கொடை நல்கியது குறித்த
தண்டமிழ்த் தொண்டன்,

### ப. சம்பந்தம் அவர்களது பாராட்டுரை.

## கட்டளைக் கலித்துறை

மாயிரு ஞாலந் தமிழ்வழக் கானதெல் லாம்மறந்து
போயின காலமிக் காலங்கண் டீரிதைப் போற்றுவரார்
தாயினும் நல்லவர் தஞ்சைக் கரந்தையர் சங்கமிதற்
காயிரம் பொன்தந்து பேறுபெற் றானெம் அழகணனே

தேடிவந் தானிலை யண்டிரன் ஆய்எனச் செந்தமிழால்
பாடிவந் தானிலை முன்பின் தெரிந்து பழகினரைக்
கூடிவந் தானிலை செந்தமிழ்க் கல்வி குலவலவன்
போடிவந் தானுக் கோராயிரந் தந்தனன் புங்கவனே.

உ

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து

# வெள்ளிவிழாவின்

தலைவராக எழுந்தருளும்

திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர், திருமிகு,
ஞானியார் மடாலயத் தலைவர், உயர் திரு,
**சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்**
சங்கத்தார் கூறும் நல்வரவு

---

எந்தையராய் ஈன்றாளாய் எழிற்றிருப்பா திரிப்புலியூர்
[இருப்பார், எங்கள்
முந்தையராந் தமிழ்மக்கள் முதிர்தவத்திற் கிரங்கி,
[யருள் முனைவ ராகத்
தந்தசிவ சண்முகமெய்ஞ் ஞானசிவாச் சாரியராம்
[தாயே! தந்தாய்!
வந்தருள்க! எமதடிகாள் வந்தருள்க! வாழிய
[வந்தருள்க மாதோ!

உமையருளுங் குமரனருள் உறுமலையாய், ஓங்குகலைக்
[கடலாய், ஆற்றல்
சமைவுறுசொற் பெருக்காறுய்ச், சற்குணமாந் தண்டலைசேர்
[தண்ணங் காலாய்ச்,
சமயமொடு தமிழ்ப்பயிரைத் தனிவளர்க்கும் பெருங்காராய்ச்,
[சார்த லாற்சீர்
அமைவுறுவேங் கடங்குமரி யன்னையரே இங்கிருக்கும்
[அடிகள் அம்மா!

கலைமலியு மிந்நாட்டுக் கல்விகளாம் மனையர்பலர் கலந்த வாழ்வும்
அலையுலகப் பலகலையாம் ஆர்வமுறு பெருஞ்சுற்றம்
[அணைந்த வாழ்வும்
மலிகவிநூல் விரிவுரையாம் மைந்தரொடு பேரர்களும்
[வாய்ந்த வாழ்வும்
உலகறியும் நிலையினவேல் அடிகடமைத் துறவியெனும்
[உண்மை நன்றே!

தங்குபுகழ்த் தமிழ்நாட்டிற் சமயநெறி பல்லாற்றாற்
[றளரு மிந்நாள்
பொங்குதிருக் குரவர்கடம் பொருப்பிஃதென் றுலகினர்க்குப்
[புகட்டு மாபோல்
எங்கெங்கு மெழுந்தரிய வுரைபரப்பிச் சமயப்பற்
[றெழுப்பிக் காத்தம்
மங்குநிலை போக்கியருள் வள்ளால்நும் திருத்தொண்டு
[வாழி மன்னோ !

கூடியபன் மக்களுளம் கொள்ளைகொண்டங் கெழுச்சியினைக்
[கொளுத்தும் மாண்ப,
தேடருநுண் பொருள்களெலாம் செலச்சொல்லுந் தெளிவுடைய,
[சேர்ந்தார்க் கென்றும்
பீடுறுநற் பயன்பெரிய பெற்றியின, பிறர்நமராம் பேத மில்ல,
வீடுறுநற் றெய்வமணம் வீசுவன, எமதடிகள்
[விரிக்குஞ் சொல்லே !

எத்தனையோ வகையினர்தாம் எய்தவையில் அடிகளுரை
[இயலுங் காலைத்
தத்தமது கொள்கையினிற் றாமறியா நுட்பமெலாம்
[ததும்பக் கேட்டே
இத்தகைய திறல்மாந்தர் எவரிடத்தும் யாங்காணேம்,
[ஏதோ வெங்கள்
சித்தமறி வதற்கில்லை, தெய்விகமே யாகுமெனச் செப்பு வாரே !

செவ்விதுறும் பேர்கண்டு செல்வாராய்ப், பொழுதுபொருள்
[தேரா ராகி,
வெவ்விதுறும் வெறுஞ்சொற்கள் வியப்பக்கேட் டுளம்பன்னாள்
[மெலிந்தார்க் கிந்நாள்
திவ்வியநுந் திருமுன்பு, சேர்பயனாற் பெருஞ்சொல்லர்
[தேனாஞ் சொல்லும்,
பவ்வநிறை யமிழ்தென்ன நும்மொழியும் பருகுதவப்
[பயனார் நாளே !

காலமெனும் பெருந்தேவின் கவின்படத்தைத் தீட்டுவார்
[கருத்தி னுள்ளும்
ஞாலமதாம் ஒருதேவின் நல்லுருவை வரைந்திடுவார்
[நயப்பி னுள்ளும்

சீலமறி வுறுகல்வி சேரடிகள் திகழ்காலம் தேயந் தம்மைக்
கோலமுறப் பொன்வண்ணம் கோட்டிவிளக் குறுகடமை
[கொள்வா ரன்றே.

மட்புலஞ்சேர் மகிழ்வெள்ளம், மதியெழுச்சி என்னெனுந்தே
[வர்க்கங் குங்கள்
கட்புலஞ்சேர் உவையெங்கள் கரந்தைநகர் வெள்ளிவிழாக்
[கலைஞர் கூட்டம்,
செப்புசிவ சண்முகனார் மெய்ஞ்ஞான சிவகுருவாந்
[திங்க ளென்ன
உட்பெருகு மகிழ்வுடையன் ஊங்கிதனை நிறுவியவன்
[உரைக்கு மாலோ!

வாழிசிவ சண்முகமெய்ஞ் ஞானசிவாச் சாரியர்தம்
[மலர்த்தாள் போற்றி!
வாழி திருக் கோவலொடு பாதிரியூர் மாதவமாம் வள்ளல் வாழி!
வாழியவன் அருள்சேர்ந்து வளர்கரந்தை நகர்ச்சங்கம்
[வாழி வாழி!
வாழியதன் திருநாளில் மன்னியசெந் தமிழன்பர் வாழி வாழி!

---

### கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவின் தலைவர்
## சைவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகட்கு
### சங்கக் கல்லூரி மாணவர்கள் கூறிய
## வாழ்த்துப்பா.

நிலைமேவு சீர்கொள் புலியூர் சிவசண்
முகனும் மெய்ஞ்ஞான— குருநாதன்,
நிறைஞான மெங்கும் உறவே யமிழ்த
மழைபெய்த லென்னும்— உரையாளன்,
மலைமேவு திங்கள் நிலவென்னும் ஞாலம்
ஒளிமேவு கின்ற— ஒருசீரன்,
மனனுர் கரந்தை நகர்மேவு சங்க
வலியாகி நின்ற— உறவாளன்,
பொலிவாகு வெள்ளி மலிநாளி தென்னப்
பொலநாள தென்னும்— ஒருநாளும்

புலவோர்கள் தங்கள் தலைமேவு நல்ல
நெடுநாளை வாழ்வு— பெறுமாறே
அலைமேவு செந்தில் உளமேவு கந்தன்
வரைமேவும் எங்கள்— திருவாளன்
அயிலோ டுகந்த மயிலோனெம் வள்ளி
யனைதெய்வ யானை— அருள்வாரே.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர், உயர்திருவாளர்,
செந்தமிழ்ப்புரவலர், இராவ்சாகிப்,

## த. வே. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L.,

## அவர்கட்கு

## திருவையாறு அரசர்கல்லூரி மாணவர்கள் அளித்த

## வாழ்த்துப்பா.

### நேரிசை ஆசிரியப்பா.

வடவயின் வேங்கடம் ஒழிதிசைப் பெருங்கடல்
எல்லை கொண்டுலவு மினித்திடு செந்தமிழ்
தன்னொப் பிலாத தகவுடைத்தாக
மன்னவர் மூவரும் மன்னுபல் புலவரும்
கண்ணென வளர்த்த கனிந்திடு தீந்தமிழ்
மக்கள தியல்பம் மக்கள் மொழியினும்
தக்கிடு மென்பதன் சான்றென இயல், இசை,
கூத்தென முக்குணம் கொண்டிடுமின் தமிழ்
அரியணைப் பொலிந்த அழகுறு வண்டமிழ், முன்னர்
நம்தமிழ் நாட்டில் சிலர்புகுந் தமையால்
பொன்னுளம் சுருங்கி புழுக்குற் றழுங்கி
வெய்துயிர்த் தழுது வெங்கணீர் சிந்தி
வடிவுகுலைந் துலறிய வாடிய நிலையில், பின்னர்
ஆங்கில ஆட்சியில் அரும்பதம் பெறுவான்
தீங்கிலவ் வசன்மொழி தேர்ந்தனர் ஒழிந்தார்
இத்தகைத் தமிழர்; என்னென இசைப்பேம்
அத்தகை ஆங்கில மறிபல அறிஞரும்
தாய்மொழிக் குழைத்திடின் தகவுறும் நம்மொழி
இங்கிலை இன்றால் இழிந்தனள் யாயும்
அந்நிலை அவநிலை அழிநிலை கண்டே

நீதான் நினையே நெடுந்தகை அண்ணல்!
உமாமகேசுரப்பேர் ஒன்றிடு மிக்கோய்!
எத்துணை இடுக்கணும் யாய்க்குறல் பொறேனென்று
மடிதற் றெழுந்தனை மாண்புடைப் பெரும! நீ
அனைமொழிக் காற்றிய அரும்பணி எத்துணை!
ஒருவர்க் கொருமொழிக் காயிற் றொழிந்த
அருமைசே ரையாற் றரசர் கல்லூரியில்
தமிழர்க்கும் தமிழ்க்கு மிடங்காண் தகைமையும்,
தமிழ்மொழி பேணிய தகையுறு சோழர்
அமர்வுறு தஞ்சையை அடுத்திடு புகழார்
வாடாக் கரந்தை குவியாச் சங்கமொன்
றூர்வமொடு நிறீஇ அரும்பெரும் நூல்களும்
திங்கள் இதழும் திறம்பட வெளியிட்டும்
பேரா சிரியர் பல்ர்தமைப் பேணி
மாணவர்க் கனைமொழி ஆங்கிலம் பயிற்றியும், ஆண்டுகள்
நூறு கால்கொள நடத்திடு நோன்மையும்,
வெள்ளியில் தொடங்கும் வெள்ளி விழாவில், இளைஞரை
வெள்ளி அனையார் ஆக்குதற் கருந்தமிழ்க்
கல்லூரி ஒன்றும் காணும்ஓர் தனிக்கலை
குற்ற முடைத்தெனும் கொள்கையின் மருத்துவம்,
கைத்தொழில், இன்னிசை, ஏனைய பிறவும்
பயின்றிட நெறியும் படைத்திடு பண்பும்,
நொந்தனள் வாழும் நந்தமி ழாட்டியை
இந்தி என்னும் செந்திரு வாட்டி
தகைத்திடா வண்ணம் தகைத்திடு செருக்கும்,
தமிழ்க்கண் நீகொளும் சான்ற மெய்ப்பற்றினைக்
கண்டிடற் கமைந்த கட்டளை அலவோ?
நாவா யிரமிலேம் கூறுவ தெவன்கொல்?
புறமொழி பேசுவார் பேசுக நீநின்
தனிமொழி ஓம்புதல் தவிர்ந்திலை அறிவேம், தமிழே!
எந்தமக் கன்னை நின்றனக்கு மகளே, நீயவள்
தோற்றிவளர்த்தலின்; நின்மகள்யாண்டும்
இளமையள் ஆதலின் நீயுமிளமையை
தோன்றிய பொருட்குணம் தோற்றிய பொருளிடை
இல்லையாதல் யாங்ஙனம்? பெரியோய்!
பலப்பல ஊழி வாழியர்
நலப்பல தொண்டு நன்மகட் புரிந்தே.

# விநாயகர் தமிழ்க் கழகம்,

(கைலாய நூல் நிலையம்,)

தஞ்சை.

தஞ்சை நகர் நற்கிழார், தம்முரிமைப் பெரியார்
தனக்கென வாழார்,

செந்தமிழ்ப் புரவலர்,

இராவ்சாகிபு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

அவர்கட்கு,

தண்டமிழ் விநாயகர் தமிழ்க்கழகத்தாரது
கரந்தைத் தமிழ்ச்சங்க

## வெள்ளிவிழா மகிழ்க் கூற்று.

செந்தமிழ்ப்புரவல! நும்மாண் எம்மால் செவ்வன் சொல்லற் பாலதன்று. எனினும் நுண்மாண் மன்னவர் நுந்தகைமை கண்டு தருபெரும் பேறு தந்துழி, எம்மாதரம் இயல்வது செயத் துணிந்தது.

பிள்ளைவளர்வு! ஆர் நல்லறிவ! அரசிறை வகுப்பில் புகலித் தலைவர் நும்மப்பா. செம்மனச் செம்மல் வேம்பர் நும்மறி பருவம் முற்றுமுன், முன்னவனடி சார்ந்தார். அன்னணம் அம்மையும். அவருழி அன்பின் மனத்தார், அறவழி நிற்பார் நுஞ்சிற்றப்பர், அம்மையார் உயர் சீர் சுப்பராயரும் அவர் பொருள் அம்மையும் நும்பின்னருடன் போற்றி விளை பயிர் வித்தில் கண்டு பெருமகிழ்கொண்டு கல்விக்கரைகாண நின்று கண்டு மகிழ்ந்தனர். அன்னார்க்கு நும்மன்பின் பணி, ஆன்றோர், போற்றத்தக்கது.

பிள்ளையார் வினை! கல்விக்காளையராய்க் காலஞ்சென்ற அப்பர் இருந்த இடத்து சிறு உறுப்பினரானீர். இருக்க இயலாது சட்டந்தேறி இப்பால் மேல்நீதிமன்றத்து அரசர் நீதி வாதிக்கும் உயர்வு பெற்றீர். அங்கு நுந்தம் பெருமை அறியார் உளரோ?

பொதுநலப்பணி! இவை அளவுக்கடங்கா தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தலைமையில் ஈரெட்டாண்டும் சோழ வளநாடாள் கழகத்து ஈராறாண்டும், நகராணவையில் ஈரோராண்டும் கூட்டுறவில் ஓரீராண்டும் நும்மாயர் முத்துக்குமரரும், தோழர் அண்ணமாலரும், வீரராங்குமரரும், மந்திரமன்றத்தர் பன்னீரரும் பாங்கர் விளங்க பல்லோர் யாவரும் நும்பணிப்பயன் ஒக்க நுகர ஊக்கி உழைத்தீர். எண்ணில் தருவும், தெருவும் நெடுவழி, பள்ளியும், பல்வகை இன்னண எங்கும் உள! அவை மலையிலக் கென நும்மாண்பு காணவுள.

தமிழ்க்கலைத் தொண்டு! தனித்தலையளிதமிழ்ப் புரவலர் தலைவ! ஓங்கு புகழ்த்தமிழ்ச் சங்கம், வீங்கு நலந்திகழ் அண்ணுமலையர் பல்கலைக்குழூஉ, அரசர் அகராதி அவை—நுந் தனித் தமிழ்த் தொண்டுகண்டு அறியக்கிடப்பன. கரந்தைத் தமிழ்ச் சங்கமே நும்முரு, திக்கற்ற மாணவர் இல்லமே நும் மிலக்கு, அவண் நோய்தீர் சாலை நும்முள்ளயரா அன்பு, கைத் தொழிற்கூடம் நுங்கையணி, விலங்கு குறை நீக்கம் நும் விழிப்பு, நாணயக்கூட்டு—நும் நிறையில் நடுநா. சைவம்—நும் நடையில் நிலையது—நும் பொறையோ பூவினும் பெரியது அறிவின் ஆற்றலோ அலைகடற்பரப்பு. இன்னும் பலவுள. அவையும் எண்ணில; இவையும் மற்றும் இறையவர்கண்டு ஏற் புழி ஏற்றனர், ஏற்றினர். எந்துறவறத்துயரும் தமிழ்ப் புரவலர் என்றனர். எல்லாம் இயைபே.

